கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஞு டிசம்பர் மீ 12உ [No. 49.

OFFICE OF THE REGISTRAR
No.
3- JAN 1930

189084

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 961
2. அப்பர். (நாடக வியல்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 963
3. வில்லிபாரதம் (சூதுபோர்ச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை. B.A., B. L 966
4. மானத சாத்திரம் (நரம்புகள்) T. P. மீனாட்சி சுந்தரன் M.A., B.L., 968
5. தமிழ்ப் பாடம் (திருவரங்கக் கலம்பகம்) 969
6. எண்சாணுடம்பிற்கு எவ்வளவு நிலம் வேண்டும் (Tolstoy) V. K. ராமநாதன் B.A., B.L. 972
7. மலர்வனம் (காதன் மாதவி) "மதுகரம்" 976
8. நம்மாழ்வார் வைபவம் (திருவாய்மொழி) K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 977
9. கம்பராமாயணம் (கடிமணப் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L. 978
10. வர்த்தமானம் 980

கலா நிலயம்

கல்சரை அடையும் வகை

VIII

எல்லை காண்பரிய இக் கல்சரின் நலமெலாம் யாவர்க்கும் ஒல்லைவந் தெய்துமாறு யாதென விதன்மேலதிகஞ் செப்பவேண்டா. எவ்வெவர் குலமும் ஊரும் தேயமும், மற்று உலகப் பொதுவேனும், இருக்கின்றபடி யிருக்கட்டும். அந்தத்தி லதனா லாவதுங் கெடுவது மொன்றுமில்லை. ஒவ்வொருவரும் தத்தம் ஆன்மவாழ்க்கையின் உணர்ச்சியெய்திச் செம்மையிற் றழைத்த சிந்தைய ராவரேல், பின் எக்கருமம் எப்பெருமை எந்நன்மை இருமையி லுமவர்க் கரியதாகும்! ஆதலின், எவ்வகை யாசியல்முறையேனுமாள்க—ஓட்டுப்பெட்டிக்கும் நமது வீட்டுவாழ்க்கைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. அனைவரும் வறியராயின் ஆக, வணிக வேந்தராயின் ஆக—உயர்வுந் தாழ்வும் இன்பமுந் துன்பமும் பொருள்தர வாரா. குலாசார மதாசாரங்களைத் திருத்துவோர் திருத்துக; திருத்தவேண்டா வென்போர் வேண்டற்க—திருந்துவதுங் கெடுவதும் அவ்வாசாரங்களே என்று இருதிறத்தோறும் விவகரிக்கின்றனரன்றி, கூர்ந்து நோக்குங்கால், திருந்துபவர் தாமென்று மகிழ்வாரு மில்லை, கெடுவதுந் தாமென்று கரைவாரு மில்லை. முன்னோர் வகுத்த சாதி வரையறை வேண்டுவோர் வேண்டுக;வேண்டாதார் விடுக—சுயநலக் கருத்துடையான் ஒவ்வொருவனும் அவனவன்வரையில் எந்நாளுந் தனித்தனிச் சாதியே. தம் உடல் பொருள் ஆவியைப் பொதுஜனங்கள் பொருட்டு அளிப்போர் அளிக்க—கொடையோ சிறியது, ஏற்றோர் பெற்றபேறு அதனினுஞ் சிறியது. பிறரது உடல் பொருளாவிகளைக் கவர்வோரும் கவர்க—இழந்தவர் இழந்த துன்பத்தையே இருமடங்காகக் கவர்ந்தவர் பெறுகின்றனர். தெய்வ மிகழ்ந்து மறப்பாரும் அஃதே செய்க-இதனா லம் முழுமுதல் மெய்ப்பொருளில்லையென் றிழிவுபட் டொழிந்திடாது. தெய்வமுண்டென்று கூட்டங் கூடுவோர் கூடுக—தன்னைக் காக்கின்றா ரிவரென்று அத்தெய்வம் மனிதருக்கே கடப்பாடுடையதாய் நிலைத்திருக்க நினைத்திலது. இவையெல்லாம் இவ்வுலக வாழ்க்கையாம் கடலினது மேற்பரப்பில் தோன்றித்தோன்றி யடங்கும் அலைகளே யல்லால் வேறாகா. இவைகளைப்பற்றி வாய்க்காற்றுத் தூற்றுவோர் வன்மைக்கிணங்க ஒவ்வோர் அலை உயரப்பொங்கலாம், அவ்வளவே நோக்குவோர் கண்களுக்குக் கடனின்று கதித்தெழு மொவ்வோர் கல்லோலமும், உலகை இது இன்றே விழுங்கிக் கொள்ளு மென்னுமாப்போல் தோன்றுமெனினும், எஞ்சுவது ஆரவாரமே. பொங்குவதும் பாய்வதும் புரள்வதும் அயர்ந்துமீள்வதும் ஆவதே அவ்வலைகளின் கதி. பாய்ந்த அலை ஓய்ந்து மீளுங்கால் மேல்பாயு மலையைத் தடுக்கின்றது;சிற்சிலபோது தானுமே வரு மலையோடு சேர்ந்து சிறிது புரளினும் புரளலாம்.

பொதுஜனங்களின்பேரால் உலவுகின்ற இயக்கங்கள் யாவும் இவ்வலைகளே போன்றவை. புறவுலகப் பேதைமையால் கலக்கமுற்றியங்கு மிவ்வியக்கங்களுக்கும், தனிமுதற் பொருளே தனக்குச் சாக்ஷியாய் அவரவர் அகந்தோறும் அரசுவீற்றிருக்கும் உண்மை வாழ்விற்கும் உள்ள தொடர்பு, பரவைக்கு மதன்மேல் தோன்றுந் தரங்கத்திற்கு முள்ள தொடர்பின்றி வேறன்று. அலைகள் அல்ல கடல். கடலினது பெருமை அவ்வலைகளில் இல்லை. அகலத்திலும் ஆழத்திலும் நடுவிடத்தமைதியிலும், கரையின்றி நிற்கின்ற நிலையிலும், வடவையைத் தடுக்கின்ற முயற்சியிலும், மழையா யெழும்பி உலகத்தை ஊட்டுவதிலும், இருசுடரும் தன்னிற் பிறந்து தன்னையே சேர்வதிலும், தண்மையிலும், தன்பால் வந்து தோய்ந்தோர்க்குப் புண்

ணியம் பயப்பதிலும், வாரியின் மாண்பை நாம் காண்கின்றோம். வாழ்வின் உருவகம் கடல். கடலின் பெருமைக்குரியவென் றுரைத்த விக்குணங்களை வாழ்வோடிணங்கவைத் துணர்த லருமையன்று. அலைகளின் புரட்சியால் கடலினுள்ளிடம் கலங்குவதில்லை, மற்று உள்ளிடம் கலங்கி யிருத்தலால் இவ்வலைகள் எழுந்தன என்பதற்கு மில்லை. கடலின் கரையோரத்தில் மேல்பரப்பில் மாத்திரம் தோன்றும் சிறிதினும் சிறிய செய்தி இவ்வலைகள். பொதுஜன இயக்கங்களும், மன்பதை வாழ்வென்னும் கடலுக்கு அன்னவைகளே. அலைகளால் கடலுக்கு நன்மையுமில்லை தீமையுமில்லை என்னலாவதுபோன்றே இவ்வியக்கங்களால் மனித வாழ்வு மாண்புறுமென் றுவக்க வேண்டா, மற்றதனால் யாவுங் கெட்டழிந்து போமென்று கையற்றுக் கலங்கவும் வேண்டா. இவ்வலைகளே கடலென்று கருதாதிருப்பின் அது போதும்

கடவுளின் திருவுளம் இன்னதெனும் உணர்ச்சியுற்று அதற்குத் தக உலகம் ஒழுகுமாறு புரிவதே கல்சரின் கண்ணுங் கருத்துமாகும் எனப் பன்முறை முன்னர்ப்பகர்ந்துளோம். அதுவே வாழ்க்கை. அத்தகைய வாழ்க்கையில், முன்செய்த நல்வினையாற் சிலர், வெளிப்படையா யிங்குத் தோன்றும் சாதனங்களொன்று மின்றியே, தாமாகத் தோய்கின்றனர். இப்புண்ணியமுடைய பெரியோரைக் கல்லா அறவோர் என்றழைக்கலாம். அப்புண்ணியம் புரிந்திரா வேனையோர்க் குற்றதுணை சுயகல்ச ரல்லால் வேறில்லை. அச்சுயகல்சருக்குரிய இயற்கை அம்சங்களாய தெய்வசிந்தனை தருமசிந்தனை பகுத்தறிவு முதலியன நவையுறாமல் வளர்வதற்கு, இவைகளால் உயர்ந்த சான்றோர் தம் உறவு வேண்டப்படும். இச்சான்றோர் தம்காலத்தினரே யன்றிப் பின்வருவோரெல்லாம் தமதுஉறவை எய்தும்படி மாயாத தம் ஆன்மாவை நூல்களெனும் நலத்தினுல் நிறுவிச் சென்றுளார். அந்நூல்களிலும், கலையொடு கலந்த காவியங்கள் மாநுட மனத்திற்கு முதலுதவியாய் அமைகின்ற மாண்பை இத்தலையங்கங்களிற் காட்டிவந்துளோம்.

ஆதலின், கலைபொதிந்த நூல்களோ டிடைவிடாமற் பயின்றுவருவதொன்றே கல்சர் நமக்கு எளிதில் கைவருதற்கொத்தமுறையாகும். எந்நிலையிலிருப்போரும், எத்தொழில் செலுத்துவோரும், யாவரும் எந்நாளும் அவரவர் பாஷையில் எழுதியுள்ள பெரிய இலக்கியங்களையும், அப்பெரிய இலக்கியங்கள் விளங்குமாறு அவைகளைப்பற்றிக் கல்வியும் கலையின துணர்வும் உடைய அறிஞர்களால் எழுதப்பெறும் கட்டுரைகளையும், ஓதிவர வேண்டுமென்பதே இவ்வாழ்க்கையில் விரும்புதற் கியன்றது. இதற்கென் றொன்றுந் தனிமுறை வேண்டா. ஆராய்ச்சி யொன்றும் செய்ய வேண்டா. படுக்கையறைமுதல் உண்ணுமிடம் வரை நம் மனைகளில் புத்தகங்கள் எங்கும் பரவியிருக்கட்டும். கண்ணுக்கெதி ரிவை இருந்தாலே கருத்துட் கொள்ளும் தன்மையன. நினைத்தபோது கைக்கு எட்டிய புத்தகத்தை எடுத்துத் திறந்த விடத்தில் படித்துப்படித்து வைக்கின்ற பழக்க மிருந்தாலும் போதும். மெள்ளமெள்ள நம் மனம் தொடர்ச்சிக்கு அவாவி அதனை முடிவுற முழுமையாய் அமைத்துக் கொள்ளும். எடுத்த புத்தகத்தைப் படித்துணர்தற்கு வேண்டிய பாஷைப்பயிற்சி பெறுவது, விருப்ப முண்டேல், பெரியதோர் கருமமன்று. தெரிந்த வரையில் படித்து வந்தாலுமே பயிற்சியும் மேன்மேல் தானுகவே வளர்ந்து கொள்ளும்.

ஆதலின் ஆங்கில மறிந்தோர், இனித் தமிழுங் கற்கப் பொழுதுபெறு ராயினும், அப்பாஷை இலக்கியங்களை எந்நாளும் எடுத்தெடுத்து ஓதிவரட்டும். ஷேக்ஸ்பியர், கார்லைல், எமர்ஸன், ஸ்காட், டென்னிஸன், ப்ரௌனிங், ஜான்ஸன், முதலிய மேன்மையோர் வரைந்துள நூல்களை நூறுமுறை முன்னரே ஓதியுளரேனும், மேலும் பன்முறை படித்தல் மிகையன்று. தமிழே அறிந்துளோரும் அவ்வாறே தம் கம்பரையும் வள்ளுவரையும் சிலப்பதிகாரத்தையும் அகநானூறு புறநானூறு முதலிய நூல்களைக் கைவிட் டகற்றுரெனின் பின் பிறிதொருகுறையிலை. பொன்மலர் நாற்றமுடைத்தாயது போல் இருபாடையும் பயின்றோர்க்கு இருமடங்கு விருந்துளது. இவைகளோடு வடமொழியும் பயின்று, காளிதாஸனையும் வால்மீகியையும் மற்றுள பெரும்புலவரையும் தமக் கண்மிய ராக்கிக் கொள்வரேல் நறுமணமுடைய பொன்மலரில் தேனுஞ் சுரந்தது போலாகும். ஒன்று மாத்திரம் நாமிங்கு 'எச்சரிக்கை' செய்ய வேண்டியவர்களா யிருக்கின்றோம். அரும்பெரும் இலக்கியங்களைப் படிக்குங்கால் அதனழகில் அகங்குழைந்து உருகவேண்டுமே யல்லாமல், வேறோர் கருத்து மிடைபுகுந்து, பண்டைக் காலப் பழக்க வழக்கங்கள், முதலியன ஆராய்வ தென்னும் படுகுழியில் விழுந்திடாமல் காத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு ஆராய்ச்சியில் சென்ற ஒருவர், பண்டைத்தமிழ் நாடகநூல்கள் அழிந்தொழிந்ததற்குச் சங்கப் புலவர்களின் பொறாமையே காரணம் என்று கூறினர். அந் நாடகநூல்களின்முன் தம் இயற்றமிழ்நூல்கள் பீடுபெறுவென்று, அவை தலையெடுக்க வொட்டாமல் அழுத்தி விட்டனராம். கற்றுரைக் கற்றோரே காமுற்றுப் போற்றுவார் என்பது போக, இவ்வாராய்ச்சியால் சங்கப் புலவர்களுக்கு அழுக்காறே ஆக்கிவைக்க நேர்கின்றது. தற்காலம் தமிழில் நடைபெறுகின்ற ஆராய்ச்சியால் முன்னையோர் பெருமைகளை நாம் நம்முடைமையாய்க் கொள்வதற் கெதிராய் நமது சிறுமையையே அவர் தலையில் சுமத்துகின்ற விபரீதத்திற்கு இடந்தருபவராகின்றோம். இருக்கின்ற நூல்களை அநுபவித்தால் போதும்; இல்லாத நூல்களை ஆராய வேண்டா.

தம்வரையில் செய்துகொள்ள வேண்டியது இவ்விலக்கியப்பயிற்சி யென்பதாயின், மற்றவர் நலத்தை விரும்புவோரும் அவர்களுக்குச் செய்துவைக்கவேண்டியதும் இதுவே என்பது வெளிப்படை. இதற்குப் பாடசாலைகளையும், கல்விக் கழகங்களையும், அரசாங்கக் கல்வி அதிகாரிகளையும் எதிர்பார்த்து நிற்கவேண்டிய அவசியமில்லை. அவரவர் தாம் அநுபவிப்பதைத் தம்மைச் சுற்றியுள ஒருவர் இருவர் பதின்மர் அநுபவிக்கும்படி ஒழிந்தநேரங்களில்—வேண்டு மெனின் ஒழிந்த நேரம் வாய்க்காது போகாது—செய்துவருவதே சாலும். வேறோர் புத்திமதி புகட்ட வேண்டா. வாழ்க்கைவகை வகுத்து வைக்க வேண்டா, ஆசாரங்களைச் சீர்திருத்தித் தரவேண்டா—செல்வமுந் தேடி வைக்க வேண்டா—தாமும் ஓர் தொண்டு புரிவதாக எண்ணிக்கொள்ளவும் வேண்டா. தனிமுதற் பரம்பொருள் அருளினது உரிமைஉற்றவராய்வாழ்வோம். தீமை நலிந்தது. சிறுமாநுடர் செய்யும் ஆட்சி அகன்று அருட்பெருங்கடவுள் புரிதரும் ஆட்சியின் மாட்சி இவ்வுலகிற் கைகூடக் கண்டவ ராயினேமே!

அடுத்த வருடத்திய சந்தாவிற்காக ஜனவரி முதலில் வி. பி. அனுப்புவோம். மற்று, நண்பர்கள் இம்மாதத்திற்குள்ளேயே தங்கள் 1930 வருடத்திய சந்தாவை மணி யார்டரில் அனுப்புவாராயின் அவர்களுக்கு வி. பி. செலவு குறைவதுடன், எங்களுக்கும் மிகவும் சவுகரியமா யிருக்கும். "மானேஜர்"

OFFICE OF THE ... 3-JAN 1930 MADRAS

அப்பர்

7. அப்பரும் நாடக வியலும்

(VI) குயிலுவக் கருவிகளும் அவற்றின் தொழிலும்

945வது பக்கத் தொடர்ச்சி.

"கூடிய குயிலுவக் கருவிகள்" என்பன, ஒருங்கு சேர்ந்து பாடும் வாச்சியங்கள். இதை ஆங்கிலத்தில் ஆர்செஸ்டிரா (Orchestra) என்பர். இவ்வாத்தியக்காரர்களுக்கு அரங்கில் எக்காலத்திலும் தனியிட முண்டு. தூக்கு என்பதும் ஒருவகை வாத்தியம் (வாச்சியம்) எனச் சிலப்பதிகார அரும்பொருள் உரையாசிரியர் கூறுகின்றார். (தூக்கு என்பது தாளங்களின் வழிவரும் செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கு எனப்படும் எழுவகைத்து *) தூக்கு நீங்கலாக ஏனைய கருவிகள் யாவை யென்பன காண்போம்.

குயிலுவர் எனப்படுவோர், தோற்கருவி துளைக்கருவி, நரப்புக்கருவி, உருக்குக்கருவி யென்னும் இசைக்கருவிகள் வாசிப்பவர். தோற்கருவிகளாவன, பேரிகை படகம் இடக்கை உடுக்கை மத்தளம் சல்லிகை கரடிகை திமிலை, குடமுழா தக்கை கணப்பறை தமருகம் தண்ணுமை தடாரி அந்தரி முழவு சந்தாவளையம் மொந்தை முரசு கண்விடு தூம்பு நிசாளம் துடுமை சிறுபறை அடக்கம் தகுணிச்சம் விரலேறு பாகம் உபாங்கம் நாழிகைப் பறை துடி பெரும்பறை யென்பன. இவை தேவாரத்தில் பற்பல இடங்களிற் காணலாம். இத்தோற் கருவிகளை ஆன்றோர், அகமுழவு, அகப்புறமுழவு, புறமுழவு, புறப்புறமுழவு, பண்ணமை முழவு, நாண் முழவு, காலைமுழவு, என ஏழு வகுப்பாக்கினர். தேவாரத்தில் இச்சொற்றொடர்கள் வருவதால் இவற்றை இங்குக் கூறலாயினேம். அப்பிரிவுகள் என்னை யெனின்:—

அகமுழ வாவன, மத்த ஓசையால் பெயர்பெற்ற மத்தளம் §, சல்லென்னும் ஓசையுடைய சல்லிகை ஆவஞ்சி † அல்லது குடுக்கை ‡ அல்லது இடக்கை $ யென்பது, கத்திறுற் போலும் ஓசையுள்ள கரடிகை, பேரிகை, குடமுழா வென்பன ¶ இவையே உத்தமக் கருவிகள்.

அகப்புறமுழ வாவன, மத்திமமான தண்ணுமை தக்கை, தகுணிச்சம் முதலியன.

புறமுழ வாவன அதம்க் கருவியான கணப்பறை முதலாயின.

பண்ணமை முழ வாவன, வீரமுழவான முரசு, நிசாளம், துடுமை, திமிலை யென்னும் நான்குமாம்.

நாண் முழ வாவது, நாட்பறை. இதை நாழிகைப் பறை யென்பர்.

காலை முழவாவது, துடி.

இக்கருவிகள் ஓசைகளே "முழவ" † என்று தேவாரத்தில் பகரப்படும்:—

குழலினோசை வீணைமொந்தை கொட்டமுழ வதிரக்
கழலினோசை யார்க்க வாடும் கடவுளிருந்த விடம்
சுழியிலாருங் கடலி லோதந் தொண்டிரை மொண்டெறியப் [டெறியப்
பழியிலார்கள் பயில்புகாரிற் பல்லவனீச் சரமே.

சம்பந்தர்.

மேற்கண்ட தோற்கருவிகளிற் சிறந்தது தண்ணுமையே யாதலால் சிலப்பதிகாரத்தில் (அரங்கேற்று காதையில்) தண்ணுமை அருந்தொழில் கூறி ஏனைய கருவிகளைப் பொதுப்படையில் காட்டியுளார்.

நரப்புக் கருவிகள் நால்வகை யாழாம். தோற்கருவிகள் பல, பேரற்றுப் போனதுபோல், யாழ்வகைகள் யாவும் இக்காலத்திற் காணப்படவில்லை. பித்தளை, எஃகு, கம்பிகளா லாக்கப்படும் வீணையை உருக்குக் கருவியென்னல் வேண்டுமேயன்றி அது நரம்புக்கருவி யாகாது. யாழ்க்குவேண்டிய (மாட்டு) நரம்புகளை நந்தனர் வம்சத்தார் கொடுப்பர் என்று பெரியபுராணம் கூறும். அப்பர் காலத்தில் பலவகை யாழும் வழங்கி வந்தன. இத்துடன் வீணையும் இசைப்புலவர்கள் உபயோகித்தனர். தேவாரத்தில் யாழைப் பற்றியும், வீணையைப்பற்றியும் நாடகக் கூற்றுயின வுருவகங்களில் மொழியப்பட்டிருப்பவை காணலாம்.

பண்டளவு நரம்போசைப் பயனைப் *பாலைப்
படுபயனைக் கடுவெளியைக் கனலைக் காற்றைக்
கண்டளவிற் களிகூர்வார்க் கெளியான் றன்னைக்
காரணனை நாரணனைக் கமலத் தோனை
யெண்டளவி னென்னெஞ்சத் துள்ளே நின்ற
வெம்மானைக் கைம்மானி னுரிவை பேணுந்
தண்டானைத் தலையாலங் காடன் றன்னைச்
சாரதே சாலநாள் போக்கி னேனே.

அப்பர்.

பறையுஞ் சிறுகுழலும் யாழும் பூதம் பயிற்றவே
மறையும்பலபாடி மயானத்துறையு மைந்தனுர் [வண்
பிறையும் பெரும்புனல்சேர் சடையினுரும் பெடைடறையும் பழையனு ராலங்காட் டெம்மடிகளே.

சம்பந்தர்.

---

* "ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை
முச்சீர் துணிபு நாற்சீர் கோயி
லைஞ்சீர் நிவப்பா மறுசீர் கழாஅலே
யெழுசீர் நெடுந்தூக் கென்மனுர் புலவர்"

சிலப்பதிகாரம்-அடியார்க்கு நல்லாருரை மேற்கோள்.

இது தமிழ்நாடக வியலில் ஆராய்ச்சி செய்யவேண்டிய நல்லதோர் பாகமாகும். அறிஞர் ஆராய்க.

§ இசையிடனுகிய கருவிகட்கெல்லாம் தளமாதலான் மத்தள மென்று பெயராயிற்று. இக்கருவி பல கூத்துக்களுக்கு உரித்தாகலினுலும், பாடலெழுத்தான் உள்ளே பிறத்தலானும், முழவுகளெல்லாம் இதனுள்ளே பிறத்தலானும், இதனை நான்முக னென்பர்.

† ஆவஞ்சி என்பது ஆவின் தோலைப் போர்த்தலால்.

‡ குடுக்கையாக வடைத்தலாற் குடுக்கை யென்று பெயராயிற்று.

$ இடக்கையால் வினைக்கிரியைகள் செய்தலின் இடக்கை யெனப் பெயர்பெற்றது.

¶ தரித்த மதங்கமொடு மத்தளஞ் சல்லி
பெருத்த கரடிகையே பேரி—யுரத்த
படகம் குடமுழவம் பாங்காய வேழும்
அடைவே முதற்கருவி யாம்.

சுத்தானந்த பிரகாசம்.

† சல்லரியி யாழ்முழவ மொந்தைகுழ லூமை தியம்பக்
கல்லரிய மாமலையர் பாவையொரு பாகநிலை செய்து
அல்லெரிகை யேந்திநட மாடுசடை யண்ணலிட மென்பர்
சொல்லரிய தொண்டர்துதி செய்யவளர் தோணிபுர மாமே

சம்பந்தர்.

* படுமலை செவ்வழி பகரும் பாலையெனக்
கோடி விளரி மேற்செம் பாலையென
நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கையி
னிணைநரம் புடையன வணைவுறக் கொண்டாங்
கியாழ்மேற் பாலை யிடமுறை மெலிய.

அரங்கேற்றுகாதை 84-98.—(சிலப்பதிகாரம்)

பாடுமே யொழியாமே நால்வே தம்மும்
படர்சடைமே லொளிதிகழப் பனிவெண் டிங்கள்
சூடுமே யரைதிகழத் தோலும் பாம்புஞ்
சுற்றுமே தொண்டைவா யுமையோர் பாகம்
கூடுமே குடமுழவம் வீணை தாளங்
குறுநடைய சிறுபூத முழக்க மாக்கூத்
தாடுமே யந்தடக்கை யனலேந் தும்மே
யவனுகி லதிகைவீ ரட்ட னமே.

அடையாளத் திருத்தாண்டகம் 5.

துளைக்கருவிகளில் புராதனமானது குழல். அது மூவகை வங்கிய மாகும். குழல் ஐவகைப் பொருள் களா லாக்கப்படும்:—

ஓங்கிய மூங்கில் உயர்சந்து வெண்கலமே
பாங்குறுசெங் காலி கருங்காலி—பூங்குழலாய்
கண்ண னுவந்த கழைக்கிவைக ளாமென்பர்
பண்ணமைந்த நூல் வல்லோர் பார்த்து.

இவற்றுள் வெண்கலக்குழலே நாகசுரத்திற்கு மூல பிதாவாகும் வெண்கலத்தில் துளைக்கருவி செய்து ஊதியவர், செல்வத்தால் வெள்ளியைப் பரிசோதிக்க அது நல்லிசை கொடுக்கவும், பிறகு தங்கத்திலும் வங்கிய மமைந்தது. அப்பர்காலத்திலே பொற்றுளைக்கு நாதமுண்டென் றறியப்பட்டதோ என்பதை நாம் எடுத்துக் காட்டத்தக்க மேற்கோள் தேவாரத்திற் கிடைக்கவில்லை. ஆயினும் அடியிற்காணும் அப்பர்பாசுரத்தில் "பொன் துளைக்கின்ற துளை" என்பது பொன் வங்கியத்திலெழும், சுத்த நாதத்தை அப்பர் எண்ணிப் பாடினரே அன்றே, வென்பதை அறிஞர் ஆராய்க:—

விளைக்கின்ற நீராகி வித்து மாகி
விண்ணோடு மண்ணுகி விளங்கு செம்பொன்
துளைக்கின்ற துளையாகிச் சோதி யாகித்
தூண்டரிய சுடராகித் துளக்கில் வான்மேல்
முளைக்கின்ற கதிர்மதியு மரவு மொன்றி
முழங்கொலிநீர்க் கங்கையொடு மூவா தென்றும்
திளைக்கின்ற சடையானைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தே னனே

திருமாற்பேறு-திருத்தாண்டகம் 21.

புராதனத் தமிழ்நாடகத்தில் குயிலுவக் கருவியாளர் பலர் வருவது சாதாரணமாகும். மிடற்றுக்கருவியாய்ப் பாடும் இசையோன், குழலோன், யாழ் வல்லோன், தண்ணுமைமுதற் றோற்கருவியாளர்கள். இளங்கோவடிகள் மொழிந்தவாறு இக்கருவிகள் இசைப்பது தெய்வப் பாடலாகிய * வாரப்பாடல் சுற்றிலே யாகும். இக்கருவிகள் எவ்வண்ணம் கூடி நாடகத்தில் இசைத்தனவென்பதை, இளங்கோவடிகள்:—

" குழல்வழி நின்ற தியாழே; யாழ்வழி
தண்ணுமை நின்றது தகவே; தண்ணுமை
யின்வழி நின்றது முழவே; முழவொடு
கூடிநின் றிசைத்தது ஆமந் திரிகை † " என்றார்.

இவ்வாறு " கூடிய குயிலுவக் கருவிகள் " தொழில்களியற்றும்.

VII. தலைக்கோலரிவை

நாடகவியலில் முக்கியமாய் அறிய வேண்டியன தலைக்கோலரிவை என்பவள் யார்? அவளுக்கு அத்தகைய பெயர் வருவான் ஏன்? தலைக்கோலாவது யாது? என்பன. ஆயினும் இவை தேவாரத்தில் குறிப்பாய்ச் சிற்சில சொற்றொடர்களாலும், உருவகங்களாலும் காட்டப்பட்டனவே யன்றி, இவற்றின் விவரங்களை நாம் தேவாரத்தில் அதிகமாய்க் காணக் கூடவில்லை. ஆயினும் இவ்வியலில் தலைக்கோலரிவையின் இலக்கணம் சிறிது கூறல் இன்றியமையாததாதலால், அவள் முன்னாளில் எத்தன்மையவளென்பது நோக்குவோம்:—

முற்காலத்தில் பொதுமகளிரான கூத்தியர் கலை வளர்ச்சிக்கும் காமவளர்ச்சிக்கும் பெருநகரங்களில் சிறந்த ஆபரணங்களாய் விளங்கினர். காமக்கிழத்தியராய் அல்வழியில் உழன்ற மாதர்களுக்கு யாதொரு அந்தஸ்தும் கிடையாது. அன்னோர் ஊர் அல்லது நகரங்களுக்கு வெளியே இருக்கலாமே யொழிய, ஊரில் வசிக்க ஏலாது. இக்காலத்திலும் உலகவழக்கில் " வெளித்தாண்டினவ்" என்னும் சொற்றொடரால் அநுமானிக்கலாம். ஆனால், குலத்தொழிலால் பரத்தையராய்ப் பிறக்கிறவர்க்கு யாதொரு இழிவுமில்லை *. இவர்களுக்கு நகரத்தில் இரண்டு வீதிகளும் இருந்தன. விபசாரியாய் "வெளித்தாண்டிய" பெண்ணின் சம்பந்தம் எக்குலத்திய ஆடவனுக்கும் இழுக்கும் பழியுமாகும். அவள் எவ்வளவு அழகுவாய்ந்தவளாயினும் " குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார் ". குலமுறைப்படித் தலைக்கோல் பெற்று நாடகமாதான ஒருத்தியே பழிப்பின்றிப் பொதுமகளாய் வாழலாகும். இவள் அரசன் சபையில் முக்கிய நாட்களில் ஆடவுரிமையுண்டு. கோயிலில் கடவுளை உற்சவராய் வெளியே எடுத்து வருங்காலத்தும் பக்த சிரோமணிகளுடன் கலந்து இவளும் வர யோக்கியதை யுண்டு:—

முடிகள் வணங்கி மூவாதார்கண் முன்செல்ல
வடிகோள் வேய்த்தோள் வானரமங்கையர் பின்செல்
பொடிகள் பூசிப்பாடுந் தொண்டர் புடைசூழ [லப்
அடிகள் ஆரூர் ஆதிரைநாளா லதுவண்ணம்.

திருவாரூர் - திருவாதிரைப் பதிகம் 8. அப்பர்.

எனவே இத்தகைய வுரிமை வருவதற்குப் பொதுமகள்குலத்திற் பிறந்தவள் செய்ய வேண்டியது யாது என்பதை உற்று நோக்கின் அது அவள் தலைக்கோல் பெறுவதின் மகிமையேயாம். அதன் வழக்கை நோக்குவோம்.

(i) தலைக்கோல் பெறுதல்

தேவதாசிகள் இக்காலத்தில் கோயிலில் பொட்டுக் கட்டுவதென்னும் வழக்கமுண்டு. அது கட்டுவதற்கு முன்னர், எப் புருடனாலும் அவள் தீண்டப்படாத பரிசுத்த கன்னிகையாகும். இவள் ஆடல், பாடல், அழகு முதலியன யாதொன்றும் பெறுவிடில், அவள் தாய் அவளைப் பொட்டுக் கட்டுவதற்கு விடுவதில்லை. அக்குலத்தோன் நட்டுவ னொருவனுக்கு அம்மகள் விதிப்படி மணம் செய்துகொடுக்கப்படுவள். பின்னர் அவள்பதிவிரதையாய்ஒழுகவேண்டுமேயன்றி, விபசாரமுடையவளாகின், மற்றக்குலத்தோர் விபசாரியைத் தண்டிப்பதைக்காட்டிலும், இவளுக்குத் தண்டனை அதிகம். கோயிலில் தேவனுக்குப் பொட்டுக் கட்டிய பின்னரே முறைப்படி ஒருத்தி பொதுமகளாகலாகும். இக்காலத்தில் கோயிலில் பொட்டுக்கட்டுவதென்பது, நமது தமிழரசர்கள் நிலைதடுமாறியபின்னரே ஏற்பட்ட வழக்கமாகக் காணப்படுகின்றது. இப்போதைய கோயிற்சம்பந்தம் அப்போதைய அரசன் இல்லமாகிய கோயிற் சம்பந்தத்தினின்றும் உண்டானதென நாம் அநுமானிக்கலாம். ஏனெனில் ஒவ்வொரு நகரிலு

* வார மிரண்டும் வரிசையிற் பாடப்
பாடிய வாரத் தீற்றினின் றிசைக்குங்
கூடிய குயிலுவக் கருவிக ளெல்லாம்.

† ஆமந்திரிகை - இடக்கை என்னும் தோற்கருவி.

* " தெய்வ மால்வரைத் திருமுனி யருள
வெய்திய சாபத் திந்திரச் சிறுவனொடு
தலைக்கோற் றானத்துச் சாப நீங்கிய
மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோண் மடந்தை
தாதவிழ் புரிகுழல் மாதவி......"

சிலப்பதிகாரம்-அரங்கேற்றுகாதை 1-7.

முள்ள பொதுமகளிர் யாவரும் அரசனுக் குரியவர். அரசன் வேண்டாமென்று கழித்தாலன்றி ஏனையோர் அவளை வரிக்கலாகாது. அவன் தலைக்கோல் கொடுத்த பிறகே பொதுமகள் தன் குலத்தொழிலுக்குச் செலலாகும். இதுவே (முற்காலத்தில்) பொட்டுக் கட்டும் விழாவுக்குத் தாயாகும். இதை இளங்கோவடிகள் வரந்தருகாதையில் மணிமேகலைத் துறவின் காரணம் கூறும்போது, விளக்குகின்றார்:—

" தலைக்கோ லாசான் பின்னுள னாகக்
குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார்
யாது நின்கருத் தென்செய் கோவென
மாதவி நற்றாய் மாதவிக் குரைப்ப
வருகவென் மடமகண் மணிமே கலையென்
னுருவி லாள னொருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்
ஆங்கது கேட்ட வரசனு நகரமும்
ஓங்கிய நன்மணி யுறுகடல் வீழ்த்தோர்
தம்மிற் றுன்பந் தாநனி யெய்தச்
செம்மொழி மாதவர் சேயிழை நங்கை
தன்னுற வெமக்குச் சாற்றின ளென்றே
யன்புறு நன்மொழி யருளொடுங் கூறினர்
பருவ மன்றியும் பைந்தொடி நங்கை
திருவிழை கோல நீங்கினள் ...."

இவ்வாறு துறவிக் கன்னிகையாய்ப் பௌத்தஆசிரமத்தின் கன்னிகாமாடத்தில் (Nunnery) சேர்ந்தாலன்றி, அழகு வாய்ந்த பொதுமகளுக்கு விமோசனமில்லை. இவ்வாறு மணிமேகலை போதியின் தலத்தையடைந்து அறம்படுத்தது அரசனுக்கும் நகரத்திற்கும் கடலில் ஒரு பெரிய நல்ல மாணிக்கம் வீழ்ந்துவிட்டதுபோல் துன்பம் விளைத்ததாம்! ஏனெனில் அரசன் எத்துணைப் பொதுமகளிரை வரிப்பான். எக்காலமும் வரிப்பானு? அன்னோனுக்குப் பழையன கழிதலும் புதியன புகுதலுமாய் நிற்க, இவன் கழித்தவர்,

தாக்கணங் கனையார் நோக்குவலைப் பட்டாங்
கரும்பெற லறிவும் பெரும்பிற தாகத்
தவத்தோ ராயினுந் தகைமலர் வண்டின்
நகைப்பதம் பார்க்கு மிளையோ ராயினுங்
காம விருந்தின் மடவோ ராயினு
மேம வைகலின் றுயில வதியும்
பண்ணும் கிளியும் பழித்த தீஞ்சொல்
எண்ணெண் கலையோர்

எஞ்சிய நகரமாக்களுக்குப் பயன்படுவர். இவர்கள்

" ஆடலும் பாடலும் அழகு மென்றிக்
கூறிய மூன்றி னொன்று குறைபடாம
லேழாண் டியற்றியோ ரீரா றாண்டிற்
சூழ்கழன் மன்னற்குக் காட்டித் "

தலைக்கோல் பெறவேண்டும்.

தலைக்கோல் பெறுவதென்பது ஒரு பெரிய விழாவாகும் †. அக்கோல் கெட்டியான மூங்கிலாகும். பொதியமலை முதலிய புண்ணிய மலைப்பக்கங்களில் நெடிதாகி உயர வளர்ந்த * மூங்கிலில் கண்ணொடு கண்ணிடை ஒரு சாணக வளர்ந்துகொள்ளல் வேண்டும். ஏனெனில் அதுவே மூங்கிலிற்குச் சரியான பருவமாகும். இத்தகைய மூங்கிலால் அரசர்கள் சந்திரவட்டக் குடைகளின் காம்புகள் செய்யப்படும். அம்மூங்கிலே தலைக்கோல் செய்யவும் பயன்படும்.

இவ்வாறு ஆராய்ந்தெடுக்கப்பட்ட மூங்கிலை ஏழுசாண் அளவுக்கு வெட்டி அதை நல்ல நாளில் தலைக்கோலாக நாட்டல் வேண்டும். இதற்கு விதி:—

"புண்ணியமால் வெற்பின்பொருந்துங்கழைகொண்டு
கண்ணிடைக் கண்சாண் கனஞ்சாரு—மெண்ணிய
நீளமெழு சாண்கொண்டு நீராட்டி நன்மைபுனை
நாளிற் றலைக்கோலை நாட்டு" பரதசேனபதியார்.

நாடகக்கணிகை தலைக்கோல் கொள்ளும் நாளில் புண்ணிய நதிகளி னீரைப் பொற்குடத்திலே முகந்து வந்து இத்தலைக்கோலை நீராட்டிப் பின்பு மாலைகளும் சூட்டுவள். இவளுக்குத் துணையாக ஆடலாசிரியன் அரங்கின்கண்ணே இக்கோலுக்கு அபிடேகம் செய்வன். மாலையுஞ் சூட்டுவன். அவ்வாறு சூட்டு முன்னர் அக்கோல் கண்தோறும் ரத்தினங்கள் அணியப்பெறும். இடைஸ்தலங்களில் சாம்பூந்தமென்னும் பொற்றகட்டாற் * செறிய மலக்கமாகக் கட்டப்படும். இத் தலைக்கோல் கொள்ள நன்னாள் † இடபம், சிங்கம், துலாம், கற்கடகம், விருச்சிகம், மிதுனம் என்பவற்றோடு சேரும் பூராடம், கார்த்திகை, பூரம், பரணி, இரேவதி, திருவாதிரை, சித்திரை, விசாகம், மகம் என விவை.

இந்நாளில் பூசித்தெடுத்த தலைக்கோலை இந்திரகுமாரனை சயந்த னென நினைத்து மந்திர விதியாலே பூசித்து வழிபட்டு இராசாவின் கோயிலிலே காப்பாகவிருக்கக் கடவதென்று நாட்டுவர். இவ்விழாவுக்கு அரசன் எழுந்தருளல் வழக்கம். ஆயினும் அரசன்ஒவ்வொரு கணிகையின் தலைக்கோல் கொள்ளுநாளிலும் வர இயலாததலான், அரசனுக்குப் பிரதிநிதிகள் செல்வது முண்டு. சில தமிழரசர்கள் பொது மகளிரைக் கண்ணெடுத்துப் பாராதிருந்தமையால் அரசன் வரவேண்டிய அத்தகைய விழாவுக்கு ஊரிலுள்ள பெரிய பிரபுவையும் வரவழைத்துத் தலைக்கோல் பெறுவதுமுண்டு. கரிகால்சோழன்போல் போர் முகத்திலே வாழ்நாட்களைச் செலவு செய்பவன், இத்தகைய விழாவுக்கு வரத் தீர்க்கையு மிராது. ஆதலால் பெரிய அந்தஸ்துடைய கோவலன் போன்ற வணிகனும் தலைக்கோல் விழாவின் தலைவனுப் நிற்றலும் பெரு நகரங்களிற் சாதாரண வழக்கமாம். ஆயினும் சிலப்பதிகாரத்தில் அரசன் பிரத்தியக்ஷத்திலிருந்தே தலைக்கோல் மாதவிக்குக் கொடுத்ததாகவே அரங்கேற்று காதையிற் காண்கின்றோம்.

தலைக்கோல் பெறுவதற்கு முன்னர்ச் "சூழ்கழன் மன்னர்க்குக் காட்டும்" பெண்ணனவள் மேற்சொல்லியவாறு அமைந்த நன்னாளிலே, பொற்பட்டத்தையும் ஆபரணங்களையும் அணிந்து அரசனுடன் புறப்பட்டு அரங்கின்கண் வரும் பட்டத்து யானையிடம், தலைக்கோலை வாழ்த்திக்கொடுத்து, இக்கணிகையேறி ஊர்வலம்செய்ய வரும் தேரையும், பட்டத்து யானையையும் அரசன் மந்திரி முதலான சேனைபரிவாரங்

† தழல்சேர்தரு திருமேனியர் சசிசேர்சடை முடியர்
மழமால்விடை மிகவேறிய மறையோனுறை கோயில்
விழவோடொலி மிகுமங்கையர் தகுமாடக சாலை
முழவோடிசை நடமுன்செயு முதுகுன்றடை வோமே

சம்பந்தர்.

* தேடிக்காணார் திருமால் பிரமன் றேவர் பெருமானை
மூடியோங்கி முதுவே யுகுத்த முத்தம் பலகொண்டு
கூடிக்குறவர் மடவார் குவித்துக் கொள்ள வம்மினென்
றாடிப்பாடி யளக்குஞ் சார லண்ணு மலையாரே

சம்பந்தர்.

*"பேரிசை மன்னர் பெயர்புறத் தெடுத்த
சீரியல் வெண்குடைக் காம்புநனி கொண்டு
கண்ணிடை நவமணி யொழுக்கி மண்ணிய
நாவலம் பொதிந்தகட் டிடைநிலம் போக்கிக்
காவல் வெண்குடை மன்னவன் கோயி
லிந்திரச் சிறுவன் சயந்த னுகென
வந்தனை செய்து வழிபடு தலைக்கோல்"

அரங்கேற்று காதை 114-20

† பூராடங் கார்த்திகை பூரம் பாணிகலஞ்
சீரா திரையவிட்டஞ் சித்திரையோ—டாருமுற
மாசி யிடப மரிதுலை வான்கடகம்
பேசிய தேண்மிதுனம் பேசு மதிவாணனூர்,

களையும் இம்மாது வலஞ்செய்வாள். பிறகு இவளுடன் வரும் பாடகன் கையில் மேற்கண்ட தலைக்கோலைக் கொடுத்துத் தேருடன் ஊர்வலஞ்செய்து அரங்கிற் புகுவாள் புகுந்து தானும், தன் துணையாம் தோரிய மடந்தையர் முதலானோரும் தத்தம் இடத்தில் நின்ற பின்னர், தலைக்கோலைத் தனக்கும் அரசனுக்கும் எதிர்முகமாக அரங்கில் வைத்து நாடகம் ஆரம்பிப்பாள். இதையே சம்பந்தர் திருவையாற்றுப் பதிகத்தில்.

"காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலளைந்த கமழ்தார் வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே"

எனக் குறித்துள்ளார். இவ்வாறு நாடகத்திற்குச் செல்லும் கணிகையர் பாதத்தின் அழகை யெண்ணியோ, அத்தலத்திற்பாடிய அப்பரும், சிவபெருமானைப் பாடும்போது,

"பாடகக் காலகழற் கால்பரி திக்கதி ருக்கவந்தி [னடந்த
நாடகக்கால் நங்கைமுன் செங்க ணானத்தின் பின் [நின்றகால்
காடகக்கால் கணங்கைதொழுங்கால் எங்கணாய்
ஆடகக்கா லரிமான் தேர்வலவனை யாற்றனவே"

என்றார் போலும். மற்றும்,

"கோணிக் கோண்டையர் வேடமுன் கோண்டவர்
பாணி நட்டங்க ளாடும் பரமனை
ராணிப் பொன்னி னண்ணுமலை கைதொழப்
பேணி நின்ற பெருவினை போகுமே" என்றார்.

திருவண்ணாமலைத் திருக்குறுந் தொகை 7.

வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்.

[954 வது பக்கத் தொடர்ச்சி]

சூதுபோர்ச் சருக்கம்.

தன்னை நொந்து மைந்தன்சொன்ன வெம்மொழிகளைக் கேட்ட விதுரனுக்குச் சினம் மேலிட்டது. அண்ணலை நோக்கி அவனும்,

புந்தியின் மறுவி லாதோய் புதல்வரி லொருசா ரன்பு
தந்தையர்க் கில்லை யென்று யானுமத் தந்தை யன்றோ?

[குற்றமற்ற மனதை யுடையவனே! இருவகைப்பட்ட பிள்ளைகளில் ஒரு திறத்தாரிடத்து மட்டுமே அன்பு தகப்பன் முறையி லிருப்பவர்களுக் கில்லையென்று சொன்னாயே; நானு மவ்வகையான தந்தை யல்லனோ]

மறுவிலா மதியினாய்! தந்தையர்க்குத் தனயரிடத்துக் கண்ணோட்ட மில்லையென்று நீயே புகன்றனை. அஃதுண்மையாயின், யானுந் திருதராட்டிரனைப்போலோர் தந்தையே யாதலால், நினது சொற்படியே எனக்குங் கண்ணோட்ட மில்லை யென்பதை மறந்தாயே. மறுவிலா மனத்தோய் நீ என்பதை யானறிவேன்; நினது குற்ற மனைத்தும் நினது சேர்க்கையினாலேற்பட்டது. நீங்களும் பாண்டவரும் நேய நெறியி லொழுகின் பகையரச ரெல்லாம் பணிந்து நும் வாயிலில் வந்து கிடப்பர்; அற்றன்றேல், அவரனைவரும் அளவிலா வானந்தமடைவர். யானுனக்கு நீதி நெறியைப் புகட்டவே சில மொழிகளைப் புகன்றேன்.

ஆதலா லுறுதி சொன்னே னுமுறை தெரிந்து கோடி [லேன்
ஏதிலார் போல யானு மினியுனக் கியாதுஞ் சொல்
தீதிலா துணரா வஞ்சச் சிந்தையார் பரிந்து கூறுங்
கோதலா துனக்கிங் கேலா தெனச்சில கூறி னானே

[ஆகையால் நன்மை தரத்தக்க வழியைச் சொன்னேன்; அது அவ்வாறு ஆதலைத் தெரிந்து கொள்வாயாக. அயலார் போல இனி நான் உனக்கு ஒன்றும் சொல்லமாட்டேன். தீமையைத்தவிர வேறு அறியாத வஞ்சனை மனதிற் குடிகொண்டவர் உன்னிடம் அன்புகாட்டிச் சொல்லும் குற்றங்கள் தவிர வேறொன்றையும் உன் மனது கொள்ளாது" என்று சில வார்த்தைகளைக் கூறினான்]

தந்தையை யடுத்து மைந்த னுண்ணவுணவு கேட்பி னவனுக் கன்னான் கல்லைத்தான் மண்ணைத்தா னுண்ணக் கொடுப்பனோ?

'என்னைக்கடிந்துரைத்தாயாதலால் உனது காரியங்களில் தலையிட்டுக்கொள்ள உரிமைபெற்ற அயலார்போல் யானும் இனி வாளா விருப்பேன். அன்றியென்னை நீ பகைவனாயெண்ணில், துன்னலர்போல் யானு மினியுனக் கிதமொழிகளொன்றும் புகலாதொழிவேன். உனக் குறவினராயிருந்தும், நன்மையல்லா வழிகளை போதியின்னல் விளைத்து நேரலரென்னக் கொள்ளத்தக்க சிலரைப்போல் நானுமுனக்குத் தகுதியல்லாதனவற்றைச் சொல்லேனென இனித் தெளிதி. நீ இப்போதிருக்கும் மனப்பான்மையில், வஞ்சமே குடிகொண்ட வீணர் சொல்லும்சொற்களே பேய்த்தேரைப்போல் உனக்கு விழுமிய பயனுளவாய்க் காணப்படுகின்றன.'

என்றென் றிவ்வாறு கூறிய விதுரனுக்குச் சிறந்த வழியிற் காரணங்களைக் காட்டி மறுக்க இயலாத மன்னன், ஏளனஞ்செய்து பேசத் தொடங்கினான்.

நிறுத்தறம் வளர்ப்போ னெஞ்சி
னீதியுங் குரவ ரேவன்
மறுத்தெதி ருரைக்கு மென்பால்
வடுவுநீ வரைந்து கண்டாய்
செறுத்தவ ராவி கொள்வா
யடியனேன் செய்த தெல்லாம்
பொறுத்தரு ளென்னக் கையாற்
போற்றினன் முறுவல் செய்தான்.

[தருமத்தை நிலைநிறுத்திப் புகழ்பெருகும்படி வளரச் செய்கிற தருமனுடைய மனதில் நீதி நிலைத்திருப்பதையும், உன்னைப் போன்ற பெரியோர் சொல்லும் கட்டளைகளை மறுத்து எதிர்பேசும் என்னிடத்துக் குற்றம் அமைந்திருப்பதையும் நீ பாகுபாடுசெய்து கண்டுவிட்டாய், பகைவரது உயிரைக் கொள்ளும் வல்லமை வாய்ந்தவனே! அடியேன் செய்த பிழைகளை யெல்லாம் பொறுத்தருள்வாய்" என்று சொல்லிப் புன்சிரிப்புடன் கைகூப்பி வணங்கினான்.]

தருமபுத்திரன் தருமத்தை வளர்ப்போனென்று கொண்டு அவன்பா லுள்ளமுருக அவனை நீதிமானென்றும், முதியர் முழுது முணராராய், உதடு பழுஞ் சொரிய உள்ளத்துத் தீயெரிய இருப்பவரைச் செவ்விதினுணர்ந்த நான், அவர் கட்டுரைகளை மறுத்துரைப்பதால், என்னைத் தீயோனென்றும் முடிவு செய்துவிட்டாய். நீ உன்னைப் பகைத்தவரது உயிரைக் கொள்ளும் திறமை வாய்ந்தவனாதலால், இவ்

வமயம் உன்னைப் பகைத்துக்கொண்ட எனக்கும் உயிர்க்கிறுதி யுண்டாகுமென்பது திண்ணம்; அதை யறிந்தே நான் என் பிழையைப் பொறுக்குமாறு குறையிரப்பது. வெற்றுமொழியி லவ்வாறு வேண்டின் உனக்கு மன மிரங்குமென்பதற்கில்லை; ஆதலால் என்னிரு கரங்களையுங்கூப்பி உன்னை மட்டில்லாப் பணிவுடன் மன்றாடிக் கேட்கிறேன்" என்று வஞ்சப் புகழ்ச்சி வகையிற்கூறி நகைத்தான் துரியோதனன்.

இவனது உள்ளக் கருத்தை யுணர்ந்த விதுரனும் மாற்ற மொன்றும் புகலானாகி மன்னன் முன்னின்றகன்றான். அரசனது ஆணையால் மண்டபமுங் கட்டப்பட்டது. சிற்றரசர் பலர் தங்கள் செல்வங்களைக் கொணர்ந்து தந்து, சிற்பிகளைக்கூட்டி அதனை அழகு பெறச் செய்வித்தனர். நவையறு சிறப்பினையுடைய மண்டபமுங் கண்டோர் மனதைக் கவர்ந்தது. துரியோதனன் அதனை வியந்து கொண்டாடித் தன் தாதைமுன் சென்று இம்மண்டபங் காண வுன் மைந்தரை விரைவி னழைத்தியென் றிரந்தான்.

மகன்மொழி நயந்து கேட்டு வாழ்வுறு தந்தை தானு
மிகநயந் துருகி நல்ல விரகினால் வெல்ல லுற்றீ
ரகநெடும் போர்செய் தாலு மைவரை யடக்கொணாது
சகுனியை யன்றி வேறார் தர வல்லார் தரணி யென் [றான்.

[மகன் சொன்னதை விருப்பத்துடன் கேட்டுச் செல்வம் மிகுந்த திருதராட்டிரனும், மனம் அதிகமாய்க் குழைந்து உருகித் தகுந்தஉபாயத்தால் அவர்களை வெல்லத்துணிந்தீர்; வருத்தத்தை யதிகமாய்ச் செய்யும் போரை நீண்ட நாள் செய்தாலும் ஐந்து பேரையும் அடக்குவது முடியாது? உங்களுக்கு நிலத்தைத் தரக்கூடியவர் சகுனி யல்லாது வேறே யாரிருக்கிறார்கள், என்றான்]

பிள்ளைகளிடத்தில் வரம்பில்லாத அன்பைக் கொண்ட தாய்தந்தையர் அநேகர் நெடுநாள் மக்கட்பே றில்லாமலிருந்து பின் மகர்ப்பெறின், அவர்கள் மகிழ்ச்சிக்கு எல்லையே யிருப்பதில்லை. பிறருக்குக் கற்றவைகளை யெல்லா மெடுத்துரைத்து அறிவுறுத்தும் பேரறிவாளரும், அச்சமயம் தங்கள் கல்வியையுகுத்து விட்டுப் பித்தரே போன்று மனந்தடுமாறி, மைந்தர் தமை நெஞ்சிற் றுதித்தலை மறந்து, அவரை யாருங் கேட்கப் புகழ்ந்தும், அவர் வேண்டுவனவற்றை யெல்லாம் தந்தும், அவர்களைக் குற்றங்கடியாமலும் அங்ஙனங் கடிந்தாரை முனிந்தும், நிலைமாறி நிற்பதுண்டு. இவ்வாறு பகுத்துணர்வில்லா ஆர்வத்தின் பயனாகப் பிள்ளைகள் பாழாய்ப்போவ தெவருமறிந்ததே. ஐரோப்பாக்கண்டத்தி லொரு பழந்திருடன் திருடப்போனவிடத்தி லெதிர்த்தாரைக் கொன்றதன் பயனாகத் தூக்கிலிடப்பட்டான். இறக்குந் தருவாயி லவன் தன்தாயைக்கண் டவளிடம் விடைபெற்றுக் கொள்ள வேண்டுமென்னும் விருப்பத்தைவெளியிட, சிறைக்காவலரும் "நல்லதே நினைந்தான், அந்திக்காலத்திலு மன்னையை மறவா அருங்குணசாலி யிவன்; நல்லோர் கைப்பட்டிருப்பி னுலகிற் புகழ் படைத்திருப்பா"னெனக்கொண்டாடி யவன்தாயைக் கொணர்ந்தவன்முன் விட்டார்கள். மகனைத் தழுவி முத்தமிட்ட தாயைத் தானு முத்தமிடுபவன்போ லவள் காதைக் கடித்து விட, இதைக் கண்டவர்களெல்லாம் கலங்கி யவனை வையத்தொடங்கினார்கள். கழுத்திற் கயிற்றை மாட்டி நின்ற கைதியுந் தன்னைச் சூழ்ந்துநின்றாரை நோக்கி "யான் சிறுவனாயிருக்கும்போது சிறுசிறு சாமான்களைத் திருடித்திருடி என்தாயிடம் கொடுப்பதுண்டு. அச்சமயம் அவள் அவைகளை வாங்கி விற்று மகிழ்ந்து வந்தாள். அச்செய்கைகள் குற்றமானவை யென்று என் புத்தியிற்படக் கூறி, என்னைத் தண்டித்திருப்பாளேல், நான் இக்கதிக்கு வந்திருக்க மாட்டேன். அவள் கடமையை யவள் செய்யத்தவறி யென்னை உயிரிழக்கச் செய்ததற்காக அவளை நான் கடித்தேன்" என்றனனாம்.

கண்கள்போல் தெரியா மனக் கோளினான், திருதராட்டிரனுக்கும் தெளிவுண்டாகவில்லை. தன் மைந்தர் செய்வ தடாதென வவர்களை யொறுப்பதைவிட்டு, அவர்களை நயந்து கொண்டாடியது ஏழைமைத்தே. இச் செய்கைதான் பின்வரும் செயல்களுக்கு அடிப்படையானது. பாரதக்கதைக்கே யிதுதான் மூலக்கல்லாம். இதைப் பரிதியாய்க் கொண்டு, இதனைச் சுற்றிச் சுழலும் கோள்களேயாம் பிற சம்பவங்களும். தனது பிள்ளைகள் நூற்றுவரையுமிழந்து போர் முடிவில் பாண்டவ ரைவரில் வீமனைத் தழுவவிரும்பி, மாயனா லளிக்கப்பட்ட கற்றூணை யிறுகப்புல்லித் துகள்களாக்கிய திருதராட்டிரனது எல்லையில்லாத் துன்பத்திற்கு முதற்காரணமா யிருந்தது மிதுவே. இச்சமயம் தன் பகுத்தறிவைச் செலுத்தித் தனக்குணர்வில்லாவிடினுந் தன் தம்பி சொன்ன கட்டுரைகளை மனதில் நிறுத்தி, ஆராவறிந்து பிள்ளைகள் புன்றொழிலை விலக்காதொழிந்தான் கண்ணில்லான். மனத்திடமில்லாத மந்தபுத்தி மாந்தருள் இவனொருவனாயதால், கருமத்திற்கேற்ற பல னிவனுக்குக் கைகூடியது. விடமிட்டு வீமனை நட்டாற்றிற் றள்ளியபோதும், அரக்குமாளிகையிலிட்டு அனலூட்டியபோதும், தன் மக்களைக் கடிந்துரையாத அறிவிலி, குளிருக்குஅஞ்சி வெடிமருந்துச்சாலைமேல்நின்றுதீமூட்டி யனற்காய விரும்பும் அந்தகன், தன் கண்களோடு காதுகளையு மிழக்கத் தக்கவனே. பாரதக் கதையில் இவன் நிலைத்த வுணர்வுஇல்லாதவனாய்த் தளர்ந்த மனதுடன் வருவன வரட்டுமென் றிருந்துவிட்டதனால் அவனுக்கு மவன்குடும்பத்தார்க்கு மழிவு உண்டாயிற்று. இவ்வாறு அழுத்தமான அறிவும் திருத்தமான செய்கையு மில்லாததால், தாங்களீட்டிய செல்வமனைத்தையுஞ் செல்வமாய் வளர்த்த பிள்ளைகள் வம்புக்கும், வைத்தியர்க்கும், கவறுக்கும், பரத்தையருக்கு மள்ளித்தெளித்துத் தங்கள் கண்முன்னே வறிஞராய்த் தங்களையும் தெருவிலிழுத்துத் தங்கள் நற்பெயரையும் கௌரவத்தையும் மண்ணிலழுத்தித் தள்ள மனிதர் தங்களை மீளாத்துயருக் காளாக்கிக் கொள்வதை நாம் கண்டதில்லையோ?

விரகால் வெல்லவேண்டுமென்றும், மண்டபமொன்றமைத்துப் பாண்டவரை வருவித்துச் சூதாடி நாடு நகரங்களைக் கவரவேண்டுமென்றும் தன் பிள்ளைகள் சொன்னதைக்கேட்டும், இவர்களைத் தடுத்து விதுரன் விளம்பியதைச் செவிமடுத்தும், இதனால் தன் மகன் கோபங்கொண்டு கழறியதைக் காதுகொடுத்தும் நின்ற அந்தகன், இதுபோது தன் பிள்ளையின் கோபத்திற்கஞ்சியோ பாண்டவரா லீட்டப்பட்ட பெருநிதியைப் பெற்றுவிடலாமென்ற பேரவாக்கொண்டோ, அவர் செய்கையை மெச்சினின்றான். அதோடு துரியோதனனுவப்பச் சகுனியையும் புகழ்ந்தான். கேடு வரப்போவதால் மதிகெட்டு நின்றது. யாவருக்கு மூத்தோனாய், எல்லாக் காரியங்களையும் செலுத்துந் தகையோனாய், குடும்பத்திற்குப் பெரியோனாய் நின்ற இவன், கண்கெட்டுச் சிறு காரியங்களுக்கும் பிறருதவியை நாடவேண்டி நின்றதால், நடப்பது நடக்கட்டுமென விட்டு, அந்தோ! பிள்ளைக்கும் முகஸ்துதி கூறி அவ னிழிதொழிலிற்கு முடந்தையாய் நின்றனன் போலும்.

மானத சாத்திரம்

PSYCHOLOGY

நரம்புகள்.

931வது பக்கத் தொடர்ச்சி.

கருப்பையில் இளஞ்சூல்(Enbryo)வளர்கின்றபோது நரம்புகள் எங்கே இருந்து தோன்றுகின்றன? கருவானது முட்டை போன்றது என முன்னமே கூறியுள்ளோம். இந்த முட்டையிலே நரம்பு எங்கே இருக்கிறது. நரம்புகளைக் கண்கூடாக முட்டையில் காணமுடியாது. ஆனால், அதன் மீந்தோல்தான் பின்னர் நரம்பிற்குத் தாயகமாகின்றது. இளஞ்சூல் முற்றி வளர்ந்துவருகையில் இம்மீந்தோலின் இடையே (Neural Groove) ஒரு பள்ளம் வீழ்கிறது. இதுவே நரம்புப் பள்ளம். நாளாக நாளாக இப்பள்ளத்தின் இருபுறமும் இணைந்துவிடுகின்றன. முன் வாய் திறந்து பள்ளமாய் இருந்தது. இதன் இடையே ஒரு புழை உண்டாகின்றது. வாறு நரம்புப் பள்ளமானது நரம்புக்குழையாகி இவ்வளர்கிறது (Neural or Medullary Tube). இக்குழையின் உட்புறம் நாளடைவில் தடித்துப் பருக்கின்றது. இங்ஙனம் தடித்து வளர்வதுதான் பின்னர் மூளை எனப் பெயர்பெறுகிறது. மேற்புறம் அத்துணையளவு பருப்பதில்லை; ஆனால், ஒரேயளவாக முற்றும் வளர்கிறது. இதுவே பின்னர் முதுகு நரம்புக்குழாய் (Spinal cord) எனப் பெயர் பெறுகிறது. இந்த நரம்புக்குழை இவ்வாறு வளர்ந்து வருகையில் சில கருவுளிகள் (cells)* இக்குழையின் முன்புறத்திலிருந்து வெளியேறுகின்றன. இவ்வாறு வெளியேறியவைகளே பின்னர் முதுகுநரம்பு முடிச்சுகளாக (Spinal ganglia) அமைகின்றன. முதுகு நரம்புக் குழையிலிருந்தும் (Spinal cord) முதுகு நரம்பு முடிச்சுக்களிலிருந்தும் (Spinal ganglia) வேறு சில கருவுளிகள் வெளியேறிச் செல்கின்றன. இவையே பின்னர் அக நரம்பு முடிச்சுக்கள் (Visceral ganglia) ஆக அமைகின்றன. நரம்புக் குழாயின் உட்புறத்தினின்றும் சில கருவுளிகள் (Cells) வெளியேறிக் கண்நரம்புகளாகவும் செவி நரம்புகளாகவும் வளர்கின்றன. மூக்கு நரம்புகளும் இவ்வாறே வேறு பிரிந்து வளர்ந்தவையாகும். மூளை, முதுகு, நரப்பக் குழை, முதுகு, நரப்ப முடிச்சுக்கள், அக நரப்ப முடிச்சுக்கள் என்று மேற்கூறிய பிரிவுகளிலிருந்து உடல் முழுதும் நரம்பு நார்கள் (Fibres) ஓடுகின்றன. இவை நன்கு வளர்ந்து முற்றியபோது, இயக்கநரம்பின் விழுதுகளாகவும் புகுவாய் நரப்பத்தின் (Sensory Neurons) கிளைகளாகவும் (Dendrites) விளங்குகின்றன.

நரம்பமைப்பில் இன்றியமையாதது இயக்குவாயே எனக் கண்டோம். அவ்வியக்குவாய் கடற் பஞ்சில் கண்டதுபோல மீந்தோலிலேயே பொருந்தியிருப்பதையும் கண்டோம். அதற்கேற்ப இந்நரம்பமைப்பே இளஞ்சூலின் மீந்தோலிலிருந்து நின்றும் வளர்வதைக் காண்க.

கீழ் நிலைகளில் உள்ள உயிருளிகளிடம் (Living beings) சிறுகச் சிறுக வேற்றுமை யுண்டாவதால் உயர்நிலை யடைந்து மாறிக்கொண்டுவரும்போது உயர்நிலையிலுள்ள உயிருளிகள்தோன்றுகின்றன. உலக மலர்ச்சி (Evolution) முறையைப் பலரும் அறிவர். இளஞ்சூலிலிருந்து நரம்பமைப்பு வளருமுறையைக் கண்டோம். பல வேறு நிலையிலுள்ள உயிருளிகளிடை இம்மூளை எவ்வாறு மாறி வளர்ந்து வருகிறதென உலகமலர்ச்சி முறையால் கண்டறிதல் வேண்டும். கடற்காற்றுமலரானையும் கடற்பஞ்சினையும் முன்னர் ஆராய்ந்தோம். முதுகு எலும்பிகளில் (Vertebrates) தவளையைப் பலரும் பன்முறை ஆராய்ந்துள்ளனர். அதனிடத்தே நடுவிட நரம்பமைப்பு (Central Nervous System) ஒன்று உண்டு அதனுடைய மூளையும் முதுகு நரம்புக்குழையும் கூடியதே அந்நடுவிடநரம்பமைப் பாகும். மூளையோ தலையோட்டினிற்குள் கிடக்கின்றது. முதுகின் நடுவெலும்புத் தடி உண்மையில் பல சிறு எலும்புகளின் தொடர்ச்சியேயாகும். வளைய வடிவினவாகிய அம்முதுகெலும்புகளின் இடையே துளை யுண்டு. இவ்வெலும்புகள் தொடர்ந்து முதுகந்தடியாக நிற்கும்போது இத்துளையும் தொடர்ச்சியாய் ஒரு குழையாகத் தோன்றுகின்றது. இதற்குள்தான் முதுகுநரம்புக்குழை ஓடுகிறது. நரம்புகள் மூளையிலிருந்து வெளிவருகின்றன; முதுகு நரம்புக்குழையிலிருந்தும் வெளிவருகின்றன. மூளையிலிருந்து வருவன மண்டை நரம்புகள். (Craniel Nerves). முதுகுநரம்புக்குழையினின்றும் வருவன முதுகு நரம்புகளாம் (Spinal nerves). இவ்விரண்டுவகையான நரம்புகளும் தவளையினிடத்தே மிகக் குறைவேயாம். முதுகு நரம்புகள் முதுகெலும்புகளின் இடைவெளியில் இணை இணையாக வெளிவருகின்றன. ஒரு புறம்போல இருபுறமும் இயைந்து விளங்குமாறு ஒரு புறத்திற் கொன்றாகப் புறப்படுகின்றன. இந்த நரம்புகள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு இரண்டு வேர்கள் முதுகு நரப்புக்குழையில் உள்ளன. ஒருவேர் மீந்தோலிற் கருகேயுள்ளது. ஈதே மேல் வேர் (Dorsal root). மற்றொன்று அதற்குக் கீழேஇருப்பது. ஈதே கீழ்வேர். (Ventral root) மேல்வேர் எல்லாம் புகுவாய் நரப்பநார் என்றும், கீழ்வேர் எல்லாம் இயக்குவாய் நரப்ப நார் என்றும் அறிகின்றோம். ஆனால் மண்டை நரம்புகளோ இவ்வாறு இணைஇணையாகவும்முறையாகவும் காணப்படவில்லை. அவை, பல அளவினவாக விளங்குகின்றன. அவற்றில் சில இயக்க நரம்புகளாகவும் சில புகுவாய் நரம்புகளாகவும் சில இருவகை நரம்புகளாகவும் இருக்கின்றன. நரம்பமைப்பானது முதலில் குழையாகஇருந்தே வளர்ந்ததென்பதைக் காட்ட முதுகு நரம்புக் குழையினிடையே சிறிய புழையொன்று இப்பொழுதும் ஓடுகின்றது. இப்புழை மூளையினுட்புறத்தே பெரிய குழிகளாக மாறிவிடுகின்றது (Ventricles). முதுகு நரம்புக்குழை யானது (Spinal Cord) நுனி சிறுத்து முடியும் பிடரி மூளையோடு (Meduulla) தொடர்ந்திருக்கிறது. முதுகு நரம்புக்குழையை எதிர்நோக்கும் பின்புறத்தில் இப் பிடரிமூளை சிறுத்திருக்கிறது; முன் புறத்திலோ பெருத்திருக்கின்றது. இப் பிடரிமூளையின் முன்பாக நடு மூளையானது (mid Brain) இரண்டு முட்டை வடிவினதாகக் கிடக்கின்றது. இதற்கு முன்னாக, இருவட்டப் பிளவாக (Hemispheres) மேல் தோன்றும் முன்தலை மூளை (Cerebrum)இருக்கிறது. இப்பிளவுகளின்ஒவ்வொரு முனையும் ஒவ்வொரு சூச்சுப்போல முடிகின்றது. இக்குச்சே மூக்கு நரம்பாகும். மண்டை நரம்புகளில் இதுவே முதற்படியிலுள்ளது. கண் நரம்பு முதலியன எல்லாம்முன்தலை மூளைக்குப்பின்புறத்தே தொடங்கி ஓடுவனவாகும். இந்த முன்தலை மூளைக்கும் (Cerebrum) பிடரிமூளைக்கும் (Medulla) நடுவே பின்தலை மூளையானது (Cerebellum) மேலே வீங்கி வளர்ந்து தோன்றுகிறது. உள்ளீடான தொடர்பின்றி மேலெழுந்து தோன்றுதலின் இது புற வளர்ச்சியே யாகும். மிக மிகச் சிறிய அளவினதாக இது அடங்கிக் கிடக்கின்றது. ஈதே தவளையின் நிலை.

குழிமுயலின் (Rabbit) மூளையமைப்பானது தவளையின் மூளையமைப்பிற்கும், மக்களின் மூளையமைப்பிற்கும் இடைவழியில்இருக்கின்றது. முன்தலை மூளையின் (Cerebrum) வட்டப் பிளவுகள் (Hemipheres) தவளையின் முன்தலை மூளையை விடப் பெரியன. தவளையினிடத்து மறைந்து ஒடுங்கிக்கிடந்த பின்தலை மூளை (Cerebellum) குழிமுயலினிடத்தே மிகப்பெரிதாக வளர்ந்து விட்டது. முன்தலை மூளைக்கு அடுத்தபடியில், பெரிதாக இருப்பது இதுதான். தவளையினிடத்தே பெரிதாக இருந்த நடுமூளை(Midbrain) இரண்டிற்குமிடையே மிகச் சுருங்கிவிட்டது. முன்தலை மூளையும் (Cerebrum) பின்தலை மூளையும் (Cere bellum) இன்னும் சிறிது பெருகி வளர்ந்தால் இரண்டும் ஒன்று கூடிவிடும்போலத் தோன்றுகின்றது. அந்நிலையில் நடுமூளை மறைந்தே போய்விடும். இவ்வாறு மறைந்துபோவதை நாயின் மூளையிலும் பூனையின் மூளையிலும் காண்கிறோம். இரண்டு முட்டை வடிவினதாகத் தவளையினிடத்தே விளங்கிய நடு மூளையானது குழிமுயலினிடத்தே குறுக்கே ஒரு பள்ளம் விழுந்திருக்கிறபடியால் நான்கு பிளவாகக் காணப்படுகிறது.

உயிருளிகள் உயர்நிலையை அடைய அடைய முன்தலை மூளை (Cerebrum) பின்தலை மூளை (Cerebellum) என்ற இரண்டும் பெருத்து வளர்ந்து மற்றைய மூளைப்பிரிவுகளை மறைத்துவிடுகின்றன. மூக்கு நரம்பானது கீழ்நிலையிலுள்ள உயிருளிகளிடத்தே முன்தலை மூளைக்கு முன்னாக இருக்கக் கண்டோம். ஆனால் மலர்ச்சிமுறையில், முன்தலை மூளையானது மூக்கு நரம்பின் மேலும் பரவி வளர்ந்து, அதற்கு முன்னாகவும் பிதுங்கி வீங்குகிறது. இவற்றின் வளர்ச்சி ஒருபுறமிருக்க, இவற்றின் நிலையிலும் ஒரு வேற்றுமை காண்கிறோம். கீழ்நிலையில் உள்ள உயிருளிகளிடத்தில் முதுகுநரப்பக் குழையும், மூளையும் தொடர்ந்து நேரே இருக்கின்றன. நேர்க்கோடு ஒன்று கிழித்தால் அது முதுகடியிலிருந்து மூக்கு நுனிவரையில் வந்து முடியும். ஆனால் மக்களின் மூக்கு நுனியிலிருந்து நேர்க்கோடு ஒன்று வரைந்தால் அது முதுகின் அடிப்புறம் வரையில் போய் முடியாது. நடுமூளைவரை சென்றபின் அந்தக்கோடு கீழாக வளைகிறது. விலங்குகள் தங்களுடைய முதுகந்தடிக்கு நேராக நடந்து செல்கின்றன. மக்களோ அதற்கு நேராக நடந்தால் காற்றில் பறக்கவேண்டும். ஆதலின் அவர்கள் அதற்குக் குறுக்காக நடக்கின்றனர். மக்கள் நிமிர்ந்து நிற்பதனால் இம்மாறுபாடு உண்டாயிற்று. முன்தலை மூளையும் பின்தலை மூளையும் பெருத்து வளர்கின்ற முறையினையும், மக்கள் நேரே நிமிர்ந்து நிற்பதால், முதுகும் மூளையும் நேராக நிற்காமல் வளைந்து நிற்பதனையும் மனதில் வைத்துக் கொண்டு, ஆராயப் புகுந்தால் மக்கள் மூளைக்கும் தவளை மூளைக்கும் அடிப்படையான வேற்றுமை ஒன்றும் இல்லை என உணர்வோம்.

உயர்நிலை யடைந்த உயிருளிகளிடம் பின்தலை மூளை எவ்வளவுக்கெவ்வளவு வளர்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் உட்புறத்தில் கவ்வுப்பிடி ஒன்று வளர்கிறது. அது நடுமூளையைக்கவ்விப்பிடித்துக்கொள்கின்றமையால் நடுமூளைப்பிடி எனலாம் (Pons). பின்தலைமூளையானது (Cerebellum) வெளிப்புறவளர்ச்சி என முன்னமே கண்டோம். இதனை அறுத்தெடுத்து விட்டாலும் 'முன்மூளையினின்று, உடலுக்கும் உடலினின்று முன்மூளைக்கும், நரம்புக்கிளர்ச்சிகள் போய்வந்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் மறைந்து கிடக்கும் நடுமூளை அத்தகைய புறவளர்ச்சி யன்று. அதனை அறுத்தெடுத்துவிட்டால் மூளையையும், உடலையும் தனித்தனி அறுத்தெடுத்து விட்டது போல நரம்புக்கிளர்ச்சிகள் தடைபட்டு விடுகின்றன. அஃதேபோலப் பிடரிமூளையும் (Medulle) நடுவிட நரம்பமைப்பின் உள் வளர்ச்சியாகும்.

மக்களது முன்தலை மூளை(Cerebrum)இருவட்டப் பிளவாக இருக்கிறது. அடியில் இவை ஒற்றிக்கிடக்கின்றன. இதன் மேற்புறம் மடிப்பு மடிப்பாக இருக்கிறது. அக்க ரோட்டுக்கொட்டையை உடைத்துப் பார்த்தால் அதன் பருப்பு இருபிளவாய் இடையில் ஒற்றிக் கிடப்பதோடு மடிப்புகளோடும் விளங்குவது போல இம் முன்தலை மூளை உள்ளதெனலாம். மடிப்பும் மடிப்பிடை வெளியுமாக (Gyrus) இப்பிரிவு காணப்படுகிறது. கீழ் நிலையில் உள்ள உயிருளிகளிடம் இத்துணை மடிப்புகளை நாம் காண இயலாது. இவ்வாறு மடிப்பு விழுவதனால், இந்த முன்தலை மூளையின் பரப்பு மிகுதி யாகின்றது. பரப்பும் மடிப்பும் மிகுதியாக மிகுதியாக உயிருளியும் அறிவு நிலையில் உயர்நிலை யடைகின்றது. மலர்ச்சித் தொடரில் (Evolution) மேனிலையும் முன்னிலையும் அடைகின்றது.

[* இன்மை என்னும் பண்படியாகப் பிறந்த இலி என்ற சொல் இல்லது இல்லாதவன் இல்லாதவன் என்ற பொருளில் பயின்றுவருகிறது. இதற்கு எதிர்மறைச்சொல் லாகிய உண்மை என்ற பண்படியாகப் பிறந்து, உள்ளது உள்ளவன் என்ற பொருள் தந்து நிற்கத்தக்கசொல் உளி என்பதாகும். ஆனால் இச்சொல் இப்பொருளில் வழக்கிலும்ஆன்றோராட்சியிலும் இல்லை எனினும் இச்சொல்லின் பயனை நோக்கிப் புதியது புகுத்தலாக இங்கே இப்பொருளில் ஆள்வோம்.]

தமிழ்ப் பாடம் 101.

[அஷ்ட பிரபந்தம்.]

[951-வது பக்கத் தொடர்ச்சி]

திருவரங்கக் கலம்பகம்.

மறக்குமோ காவின் மதுவருந்தி யப்பாற்
பறக்குமோ சன்னிதி முன்பாமோ—சிறக்கத்
தருவரங்கள் கேட்குமோ தாழ்க்குமோ நெஞ்சே
திருவரங்கர் பாற்போன தேன். 9

பதவுரை :—நெஞ்சே - என்மனமே! திருவரங்கர் பால் - திருவரங்கரிடத்தில், போன - (என்காதலை உரைக்கும்பொருட்டுத் தூதாக) போயிருக்கின்ற, தேன் - வண்டானது,

மறக்குமோ- தான் செல்கின்ற காரியத்தை மறந்து வழியிலேயே தங்கிவிடுமோ! (அல்லது) காவில் - சோலையில், மது - தேனை, அருந்தி - குடித்து, (அந்த வெறியினால்) அப்பால் - அரங்கத்தைக் கடந்து அப்பாலும், பறக்குமோ - பறந்துவிடுமோ! (வழியிலும் நின்றுவிடாமல் அப்பாலும்போகாமல் அரங்கநகரே அடைந்தாலும்) சன்னிதி முன்பு - அவரது சன்னிதிக்கு எதிரில், ஆமோ - போய் நிற்கத் துணியுமோ! (அப்படிப் போய் நின்றாலும்) சிறக்க - எனக்குச் சிறப்புண்டாகும்படி, தரு - அவர் கொடுக்கக்கூடிய, வரங்கள் - வரங்களை, கேட்குமோ - (அவரைக்கண்ட அச்சத்தினாலும் அதிசயத்தாலும்) கேட்பதற்கு அவ் வண்டிற்கு வாய் வருமோ! (அல்லது, இதுவெல்லாம்

செய்தாலும், திரும்பிவர) தாழ்க்குமோ -காலதாமதம் செய்யுமோ! (தெரிய வில்லையே.)

கருத்து :—வண்டினைத் தூதுபோக்கிய தலைவி அதன் செய்கைகளைப்பற்றிப் பற்பலவாறு ஐயுறுவாள். அந்த நிலையில் கவி தன்னை வைத்துக்கொண்டு தன் நெஞ்சொடு கூறுகின்றார்.

தேனமருஞ் சோலைத் திருவரங்க ரெப்பொருளு
மானவர்தா மாண்பெண் ணலியலர்கா ணம்மானை
யானவர்தா மாண்பெண் ணலியலரே யாமாகிற்
சானகியைக் கொள்வாரோ தாரமா யம்மானை
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தா லம்மானை.

பதப்பிரிவு :—தேன் அமரும் சோலை திரு அரங்கர் எ பொருளும் ஆனவர் தாம் ஆண் பெண் அலி அலர் காண் அம்மானை ஆனவர் தாம் ஆண் பெண் அலி அலரே ஆம் ஆகில் சானகியை கொள்வாரோ தாரம் ஆய் அம்மானை தாரம் ஆய் கொண்டதும் ஓர் சாபத்தால் அம்மானை.

பதவுரை.

தேன் - வண்டுகள், அமரும் - தங்கியிருக்கின்ற, சோலை - சோலைகளையுடைய, திரு அரங்கர் - திரு அரங்கத்திலிருக்கும் எம்பெருமான், (நிகிலத்திலுள்ள) எ - எல்லா, பொருளும் - பொருள்களும், ஆனவர்தாம் - ஆனவர் ஆயினும் அவர், ஆண் - ஆணேனும், பெண்-பெண்ணேனும், அலி - அலியேனும், அலர்காண்-ஆகமாட்டார்—அம்மானை - அம்மானை. (என அம்மானை ஆடுகின்றவர்களுள் ஒருத்தி பாட, மற்றொருத்தி அவளுரையை அயிர்த்து.)

ஆனவர்தாம் - அப்படி எல்லாப் பொருளுமாயிருக்கின்றவர், ஆண் - ஆணேனும், பெண் - பெண்ணேனும், அலி —அலியேனும், அலரே - அல்லாதவரே, ஆம் ஆகில் - ஆவாரானால், சானகியை - சீதையை, தாரம் ஆய் - மனைவியாய், கொள்வாரோ - விவாகம் செய்து கொள்வாரோ !—அம்மானை - அம்மானை (என்று தொடரவும் வேறொருத்தி, இதனை மறுத்து)

தாரமாய் - அவ்வாறு சீதையைத் தன் மனைவியாய், கொண்டதும் - மணந்துகொண்டதும், ஓர் - ஒரு சாபத்தால் - சாபத்தின் காரணமாகவே, அம்மானை - அம்மானை! (என்று முடிக்கின்றாள்).

விரிவுரை:—எங்கு மயமான ஸ்ரீரங்கநாதனது வைபவத்தைச் சொல்லி மூன்று மங்கையர் அம்மானை ஆடுகின்றனர். வடமொழி இலக்கணத்தில் புல்லிங்கம், ஸ்திரீலிங்கம், நபும்ஸக லிங்கம் எனப் பால்கள் மூன்று. இவைகளை முறையே, ஆண்பால் பெண்பால் அலிப்பால் எனத் தமிழிற் சொல்லலாம். உலகத்திலுள்ள பொருள்கள் அனைத்தும் இம்மூன்று பால்களில் அடங்க வேண்டும். விஷ்ணுவை ஆண்பால் என்பதற்கில்லை; ஏனெனில், எல்லாம் அவனேயாயிருத்தலின், பெண்ணும் அவனே, அலியும் அவனே. அவ்வாறே அவனைப் பெண்பால் என்பதற்கும் இல்லை, அலிப்பால் என்பதற்கும் இல்லை. எனவே, அம்மானை ஆடுகின்றவர்களுள் ஒருத்தி, "மற்றப் பொருள்களெல்லாம் ஒரு பால்பாகுபாட்டிற்குள் அடங்கக் கூடியனவாயிருக்க, இத் திருவரங்கனுக்கு இலக்கணம் இல்லை பார்", என்று புகழாப் புகழ்ச்சியாய் அவன் எல்லாமாயிருக்கின்றபெருமையைப் பாராட்டுகின்றாள். மற்றவள் அம்மானைக்கா யாட்டத்தைத் தன்கையில் மாற்றிக்கொண்டவளாய்ச், "சீதையை மணந்தபடியால், அவன் ஆண்மகனாக அன்றோ இருத்தல் வேண்டும்" என உரைக்கின்றனள். மூன்றாமவள் அம்மானை ஆட்டத்தைத் தன் கைக்கு மாற்றிக்கொண்டு, "சீதையை மணந்த காரணத்தினாலேயே அவனை ஆண்என்று நிச்சயிக்க வேண்டா—சீதையை அவன் தாரமாய்க் கொண்டது ஒரு சாபத்தால் அன்றோ" என, இரண்டாமவள் மறுப்பை மறுத்து முதலவள் முடிவிற்குச் சார்பாகப் பேசுகின்றனள். சாபம் என்னும் இச்சொல் வடமொழி. இது அப்பாஷையில் శాపం என்றும் చాపం என்றும் இருவிதமாக உச்சரிக்கப்படும். చాపం என்பதற்குச் சபித்தல் என்பது பொருள். శాపం என்பதற்கு வில் என்பது பொருள். ஆதலின் சாபம் என்று தமிழில் எழுதும் போது அது சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி சபித்தல் என்றேனும், வில் என்றேனும் பொருள்படலாம். இந்தச் செய்யுளில் இரட்டுற மொழிதலாக இவ்விருபொருள்களும் பொருந்தி யிருக்கின்றன. "சனகன்பா லிருந்த சிவனது வில்லை முறித்தான் அவ்வாறு முறித்தது சீதையை மணக்கவேண்டுமென்று ஒரு ஆண்மகனுக்கு இருக்கக்கூடிய ஆர்வத்தா லன்று. தன்னுடைய திறமையைக் காட்டவே அது செய்தான். அதனால், அவ்வில்லிற்குச் சுல்கமா யமைத்திருந்த சீதையை அவன் மணக்கவேண்டி நேர்ந்தது" என்பது ஒரு பொருள். மற்றது பின்வருமாறு :—அசுரர்களது குருவாகிய சுக்கிராசாரியரின் தாயும் பிருகுப் பிரஜாபதியின் மனைவியுமாகிய கியாதி யென்பவள், ஒரு சமயம் தேவாசுரயுத்தத்தில் அசுரர்களுக்கு அடைக்கலம் கொடுத்துக் காக்கவே, திருமால் அவளைக் கொன்றுவிட, பிருகு கோபங்கொண்டு திருமாலை, " நீ பத்துப் பிறவி எடுக்கக் கடவாய் " என்று சபித்துவிட்டனர். (பிறவி எடுப்பதுமல்லாமல், 'நீயும் என்போல் மனைவியைப் பிரிந்து வருந்தக்கடவாய்'' என்று சபித்தாரென்றும் கூறுவார்.) அச்சாபத்தை நிறைவேற்றவே எடுத்த பிறவிகளில் ஒன்றில் ஆணாகப் பிறக்கவும், சீதையை மணக்கவும் நேர்ந்தன வல்லாமல் திருவரங்கன் இயற்கையில் ஆண் பெண் அலி ஒன்றுமல்லன். சாபத்தின்படி சீதையைப் பிரிவதற்கே தாரமாய்க் கொண்டான்; ஆண்மகனென்ற தன்மையில் மணந்தவ னல்லன்.

அம்மானை அம்மானை என்று முடிவது ஆட்டத்தில் அவளவள் பாட்டைச் சொல்லி முடிக்குஞ் சொல்.

மானையெய்தவரின்னமென்மடமானையெய்திலர்நேமியால்
மாலைதந்தவர்பைந்துழாய்மதுமாலைதந்திலரிந்திரன்
சோனைமாரிவிலக்கிவிட்டவர்சொரிகண்மாரிவிலக்கிலார்
சுரர்களுக்கமுதங்கொடுத்தவர்சோதிவாயமுதங்கொடார்
தானையைவர்கொடிக்களித்தவர்தானைகொண்டதளிக்கிலார்
சங்கரற்கிரவைத்தடுத்தவர்தையலுக்கிரவைத்தடா
ரானைமுன்வருமன்புளார்முலையானைமுன்வருமன்பிலா
ரணியரங்கர்நடத்துநீதியநீதியாகவிருந்ததே. 11.

கருத்து:—பிரிந்த நாயகன் வாராமையால் வருந்துகின்ற தன் மகளைப்பார்த்துத் தாய் இரங்கி அவனது இயற்கையைப் பழிப்பவள்போல் திருவரங்கனது புகழ் இங்குப் பாடப்பட்டிருக்கின்றது. சிலேடை நயங்களை இச்செய்யுளில் நன்கு காணலாம்.

பதவுரை.

மானை - மாரீசனாகிய மானை, எய்தவர் - அம்பால் எய்தவர், இன்னம்-இன்னம், என்-என், மட - இளமை பொருந்திய, மானை - மான் போன்ற மகளை, எய்திலர் - சேர்ந்திலர். நேமியால் - தன் சக்ராயுதத்தால், மாலை - (பாரதயுத்தத்தில் சூரியனை மறைத்துச் சயத்ரதன் அர்சுனன்முன் வரும்பொருட்டு) மாலைப்பொழுதை, தந்தவர் - விளைவித்தவர், பை - பசுமையான, துழாய் - துளசியாலாய, மது - தேன் பொருந்திய, மாலை - மாலையை, தந்திலர் - (என் மகளிற்கு) கொடுத்திலர். இந்திரன் - இந்திரன் விடாது பெய்வித்த, சோனைமாரி - பெரு மழையை, விலக்கிவிட்டவர் - (மலையைக் குடையாய்ப் பிடித்து) தடுத்தவர், (என் மகள்) கண் - கண்களிலிருந்து, சொரி - சொரிகின்ற, மாரி - மழையை, விலக்கிலார் - நீக்கினாரலர். சுரர்களுக்கு - தேவர்களுக்கு, அமுதம் - (பாற்கடல் கடைந்து) அமிர்தத்தை, கொடுத்தவர் - கொடுத்தவர், (என்மகளுக்குத் தன்) சோதி-ஒளிபொருந்திய, வாய் - வாயிலிருந்து, அமுதம் - சொற்களாகிய அமிர்தத்தை, கொடார் - கொடுக்கமாட்டார். ஐவர் - பஞ்சபாண்டவர்களது, கொடிக்கு - மனைவிக்கு, தானை - (அவிழ்க்க அவிழ்க்க வளரும்படி) வஸ்திரம், அளித்தவர் - கொடுத்தவர், (என்மகளிடத்திலிருந்து கவர்ந்துகொண்ட) தானை - வஸ்திரத்தை, அளிக்கிலார் - திருப்பிக்கொடுத்திலர். சங்கரற்கு - பரமசிவனுக்கு, இரவை - பிச்சையெடுப்பதை, தடுத்தவர் - நீக்கினவர், தையலுக்கு - என்மகளுக்கு, இரவை - (காமநோய் விளைக்கின்ற) இராக்காலத்தை, தடார் - தடுத்திலர். ஆனை முன் - கஜேந்திரன் முன், வரும் - காப்பாற்றவரும், அன்பு உளார் - அன்புடைய அவர், முலை-முலைகளைக் கொம்பாகவுடைய, ஆனை - ஆனைபோன்ற என்மகளுக்கு, முன் - எதிரே, வரும் - வரவேண்டு மென்னும், அன்பு இலார் - அன்பு இல்லாதவராயினர்—

(இவ்வாறு எல்லாம் தெரிந்து செய்யக்கூடியவராயிருந்தும், என்மகளிடத்தில் அவை யொன்றுஞ் செய்யாமல்) அணி - அழகிய, அரங்கர் - திருவரங்கநாதர், நடத்தும் - நடத்துகின்ற, நீதி - நீதியெல்லாம், அநீதி ஆக - அநீதியாகவே, இருந்ததே - இருக்கின்றதே.

சேவடியான் மூவடிமண் தென்னரங்கத் தம்மானீ
மாவலிபால் வாங்கியநாண் மண்ணுலகோ—மூவுலகும்
வீசுங்கா லோவலிய வெவ்வினையே னெஞ்சமோ
பேசுங்கா லேதோ பெரிது. 12.

பதவுரை.

தென் - தெற்கிலுள்ள, அரங்கத்து - திரு அரங்கத்து, அம்மான்- பெருமானே! நீ - நீ, மாவலிபால் - மகாபலியினிடத்தில், மூ - மூன்று, அடி - அடி, மண் - நிலத்தை, சே - (உனது) சிவந்த, அடியால் - பாதத்தால், வாங்கியநாள் - (அளந்து) வாங்கிக் கொண்ட காலத்தில், மண் உலகோ -இந்தப்பூமியோ, (அல்லது) மூ - மூன்று, உலகும் - உலகத்திலும், வீசும் - செலுத்திய, காலோ - உன்பாதமோ, (அல்லது) வலிய - வன்மையுடைய, வெம் - கொடிய, வினையேன் - வினைகளையுடைய எனது, நெஞ்சமோ - மனமோ, பேசுங்கால் - சொல்லுமிடத்து, ஏதோ - எதுவோ, பெரிது - பெரியது, (இயம்புவாய்.)

கருத்து:—"உலகமோ மிகப்பெரியது. அதனை உள்ளடக்கிய அரங்கன் தாள் பின்னும் பெரியது. அத்தாளானது என் மனத்திற்குள் அடங்கியிருத்தலால் என்மனம் அத்தாளினும் பெரியது", என்று கவி மகிழ்கின்றார். இவ்விதம் ஒன்றைவிட ஒன்று அதிகம் என்று கூறுவது, சாராலங்காரமென்னும் மேன்மேலுயர்ச்சி அணியாம். இதன் இலக்கணத்தை முன் (2 வது வால்யூம், 692வது பக்கம்) விளக்கியுளோம்.

இலக்கணம்

நிலைமொழி ஈற்று உகரம் வருமொழி முதல் உயிரொடு புணரும்வகை யாதெனப் பார்த்தோம். அவை நெடிற்றொடர் உயிர்த்தொடர் வன்றொடர் மென்றொடர் இடைத்தொடர் ஆய்தத்தொடர், என்ற அறுவகைக் குற்றியலுகர ஈற்று மொழிகளுக்கும் பொதுவாகப் பொருந்தும். எனினும், நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களும், மென்றொடர்க் குற்றியலுகரங்களும் புணரும்போது சிறப்பாகக் கருதவேண்டிய விதிகள் ஒன்றிரண்டு உண்டு.

I. ட் அல்லது ற் என்ற மெய்களின்மேலேறியகுற்றியலுகரங்கள், நெடிற்றொடர்க் குற்றியலுகரமாகவேனும் உயிர்த்தொடர்க் குற்றியலுகர மாகவேனும் இருக்குமாயின், வருமொழி முதலுயிருடன் புணரும்போது, அவ்வுகரங் கெட்டு வருமொழி முதலுயிர் அம்மெய்களின்மேல் ஏறிக்கொள்வது மல்லாமல், நிலைமொழியில் அந்த ட் ற் என்ற மெய்களும் சிற்சில சமயம் இரட்டும்:—

1 (a) நாடு காடு வீடு, என்பனபோன்றவை ட் என்னும் மெய்யின்மேல் ஏறிய நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தை ஈற்றில் உடைய சொற்கள்.

(b) ஆறு நாறு சேறு, என்ற சொற்கள் ற் என்னும் மெய்யின் மேல் ஏறிய நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தை ஈற்றில் உடைய சொற்கள்.

2.(a) உதடு, முருடு மலடு, போன்றவை ட் என்னும் மெய்யின்மேலேறிய உயிர்த்தொடர்க்குற்றியலுகரத்தை ஈற்றிலுடைய சொற்கள்.

(b) கயிறு, களிறு, வயிறு, போன்றவை, ற் என்னும் மெய்யின்மேலேறிய உயிர்த்தொடர்க் குற்றிய லுகரத்தை ஈற்றில் உடைய சொற்கள்.

இந்நான்குவித குற்றிய லுகரங்களுக்குப்பின் உயிர் வரின் அவ்வுகரம் கெடுவது மல்லாமல், பெரும்பான்மை, ட், ற் என்ற அம்மெய்யெழுத்துக்களும் இரட்டும் :-

189084

1(a) நாடு + அரசன் = நாட்உ + அரசன் = நாட் + அரசன் = நாட்ட் + அரசன் = நாட்டரசன்.

(b) ஆறு + அலை = ஆற்உ + அலை = ஆற் + அலை = ஆற்ற் + அலை = ஆற்றலை.

2 (a) மலடு + அரிவை = மலட்உ + அரிவை = மலட் + அரிவை = மலட்ட் + அரிவை = மலட்டரிவை.

(b) கயிறு + அரவு = கயிற்உ + அரவு = கயிற் + அரவு = கயிற்ற் + அரவு = கயிற்றரவு.

பெரும்பான்மை இவ்விதம் அம்மெய்கள் இரட்டும்; சிலபோது, நாடு + ஆண்டான் = நாடாண்டான்; ஆறு + ஓடியது = ஆறோடியது; உதடு + அசைத்தான் = உதடு அசைத்தான், வயிறு + இல்லை = வயிறில்லை, எனக் குற்றியலுகங்கள் மாத்திரம் கெடுமேயன்றி, ட் ற் என்ற மெய்கள், நெடிற்றொடர் உயிர்த்தொடர்க்குற்றியலுகரங்களுக்கு இடமாயிருந்த போதிலும், இரட்டுவதில்லை. இவ்விதம் பொதுவாகக் கூறினும் எவ்வெப்போது அம்மெய்கள் இரட்டுகின்றன, எவ்வெப்போது இரட்டுவதில்லை என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். அதனை அடுத்தவாரம் பார்ப்போம்.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

டால்ஸ்டாய் எழுதிய

எண்சாண் உடம்பிற் கெவ்வளவு நிலம் வேண்டும்.

"HOW MUCH LAND A MAN NEED" BY TOLSTOY.

3

955வது பக்கத் தொடர்ச்சி.

பாஹோமுக்கு இப்போது சொந்தபூமி ஏற்பட்டது. விதை கடன் வாங்கித் தன் புதியபூமியில் சீராய் விதைத்தான். நல்ல பலனுண்டாயிற்று. ஒருவருஷத்துக்குள் நிலக்காரிக்குச்சேரவேண்டிய தொகையையும் தன் மைத்துனருக்குக் கொடுக்கவேண்டிய கடனையும் கொடுத்துவிட்டான். பாஹோம் நிலத்துக்குப் பூரணசுதந்தரமுடையவனாகிவிட்டான். தனக்கென மாடும் கன்றும் மேய்கால் பூமியும் செடியும் மரமும் எல்லாம் ஏற்பாடாய் விட்டன. நிலத்தை உழுது சாகுபடிசெய்யப் போகும் போதும், செழிப்பாய் வளரும் பயிரைப் பார்க்கும் போதும், பச்சைப்பசேலென இருக்கும் மேய்கால் பூமியினருகே செல்லும்போதும் அவனுக்கு அதிக சந்தோஷமுண்டாயிற்று. தேகம் புளகாங்கிதம் எய்தியது. அவனுடைய திருஷ்டிக்குத் தன் நிலத்தில் புஷ்பித்த புஷ்பங்களும் வளர்ந்த புல்லும் செடிகொடிகளும், மற்றவர்களுடைய செடிகொடி புஷ்பங்களைக் காட்டிலும் சிறந்தனவாகத் தோன்றின. அந்த நிலங்கள் காடுகள் யாவும் அவனுக்கு இப்போது நூதனத் தோற்றங்களாகவும் புதிய உணர்ச்சிகளை உண்டு செய்வனவாகவும் இருந்தன. பாஹோம் மிகுந்த சந்தோஷம் அடைந்திருந்தான். எல்லாம் நன்றாகவே அமைந்திருந்தது. ஆனால் அண்டை யயல் குடியானவர்கள் தங்கள் ஆடுமாடுகளைச் சரியாய்க் கட்டி மேய்த்துக்கொண்டுவராமல் அடிக்கடி பாஹோமினது பூமியில் போகவிட்டார்கள். அவன் எவ்வளவோ தூரம் நல்லவார்த்தைகள் சொல்லிப் பார்த்தான். அவர்களைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டான். ஒன்றும் பலன்படவில்லை. சமுதாய மாட்டுக்காரர்கள் கூடப் பசுக்களைப் பாஹோம் நிலங்களில் பிரவேசிக்க விடலானார்கள். இரவில் புல் தின்னப்போகும் குதிரைகள்கூடச் செழிப்பாக வளர்ந்திருக்கும் அவனுடைய நிலங்களையே தேடிச் செல்லலாயின. பாஹோம் அடிக்கடி அவைகளைத் துரத்தியோட்டினான். வேறொன்றும் செய்வதில்லை; சொந்தக்காரர்களைப் பல்லத்தனை வார்த்தைகள் கூடப் பேசுவதில்லை. ஒருவர்மீதும் கிராமாதிகாரிகளிடம் தாவா செய்யாமல் பலநாட்கள் பொறுத்திருந்தான். கடைசியில் அவனாலுங்கூடப் பொறுக்கமுடியாமல் வியாஜ்யத்துக்குத் தொடங்கினான். குடியானவர்களுக்கு நிலம் இல்லாத கஷ்டத்தினால்தான் இவ்வாறு செய்கிறார்களேயொழிய வேறு எவ்விதக் கெட்ட எண்ணங்கொண்டும் அவர்கள் இப்படிச் செய்யவில்லையென்று அறிந்திருந்தும் அவன் "எத்தனை நாள்தான் நான் போனால்போகிறதெனப் பொறுத்திருப்பேன். இப்படியே விட்டுக்கொண்டுவந்தால் கடைசியில் என்பாடு ஒன்றுமில்லாமல் போய்விடும். ஒருதரமாவது சூடு காட்டினால்தான் இவர்கள் சற்று அடங்கியிருப்பார்கள்" என்று நினைக்கலானான். தாவா செய்தான். ஒரு தாவா இரண்டு தாவா மூன்றுதாவா என்றாயின. இரண்டு மூன்று குடியானவர்கள் அபராதம் போடப்பட்டார்கள். சிறிதுகாலத்துக்கெல்லாம் அண்டையயலார்களுக்கும் பாஹோமுக்கும் விரோதம் ஏற்பட்டது. சிலர் வேண்டுமென்றே தங்கள் கால்நடைகளைப் பாஹோம் பூமியில் பிரவேசிக்க விட்டார்கள். ஒருநாள் இரவு ஒரு குடியானவன் பாஹோமுக்குச் சொந்தமான காட்டுக்குள் சென்று செழிப்பாய்த் தழைத்து வளர்ந்திருந்த ஐந்து மரங்களை வெட்டித்தள்ளிப் பட்டைகளை உரித்துக்கொண்டு போய்விட்டான். மறுநாட்காலை பாஹோம் அவ்வழி போகும்போது ஏதோ வெளுப்பாகக் கண்ணுக்குத் தென்பட அருகேசென்று பார்த்தான். பட்டை உரிக்கப்பட்ட மரங்கள் கீழே விழுந்துகிடக்க மரங்கள் இருந்தவிடத்தில் அடிமொக்கைகள் மாத்திரம் இருக்கக் கண்டான். பாஹோமுக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது.

"அடெ, இங்கே ஒன்று, அங்கே ஒன்று என வெட்டியிருந்தால்கூட நான் போனால்தான் போகிறதென்று விட்டுவிடுவேன். ஆனால் இந்தப் பாவி ஒரே இடத்தில் ஒரே கும்பலாக இருந்த எல்லா மரங்களையும் வெட்டிவிட்டானே. ஆள் மாத்திரம் இன்னானெனத் தெரிந்தால் அவனை ஒரு கை பார்த்தே விடுவேன்" என்று பேசினான் பாஹோம்

வெட்டினது யாரா யிருத்தல்கூடுமென்று நெடுநேரம் ஆலோசித்தான். கடைசியில் ஸைமன்தான் செய்திருக்கவேண்டும், வேறொருவருக்கும் இவ்வளவு தைரியம் வராது, என்று தன் மனதில் நிர்மானித்துக்கொண்டு நேராக ஸைமன் வீட்டண்டைசென்று தாழ்வாரம், முற்றம், தோட்டம் எல்லா விடங்களிலும் சுற்றிப்பார்த்தான். ஒன்றும் காணப்படவில்லை. இருவருக்கும் வார்த்தைகள்தான் முற்றின. ஸைமன்தான் செய்திருக்க வேண்டுமென்று தன் மனதில் ஸ்திரப்படுத்திக்கொண்டான். கோர்ட்டுக்குப்போய்த் தவா செய்தான். ஸைமனுக்கு ஸம்மன் பிறந்தது. கேஸ் ஒருமுறை இரண்டுமுறை விசாரணை ஆயிற்று. முடிவில் அதன்பேரில் சாக்ஷியமில்லாததால் ஸைமன் விடுதலை செய்யப்பட்டான். பாஹோமுக்குக் கோபம் பின்னும் அதிகரித்தது. "திருடர்களிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு அவர்களை யெல்லாம் விடுதலை செய்து விடுகிறீர்கள். நீங்கள் யோக்யர்களாயிருந்தால் தானே திருடர்களை நீங்கள் சிக்ஷை செய்யப்போகிறீர்கள்?" என்று நாட்டாண்மைக்காரர்களையும் ஜட்ஜகளையும் தூஷித்தான்.

அண்டையயலார்களுடன் சண்டை; ஜட்ஜகளுடன் சண்டை; பஹோமுக்கு நிறைய பூஸ்திதி யிருந்தாலும் நாட்டில் நல்லபேர் இல்லாமற் போயிற்று. அவன்வீட்டைக் கொளுத்திவிடப்போவதாக ஒரு வதந்தி உண்டாயிற்று.

இந்தச் சமயத்தில் எங்கேயோ தூரதேசத்தில் ஜனங்களுக்கு ஏராளமான பூமி இலவசமாகத் தர்க்காஸ்து கொடுக்கப்படுவதாகக் கேட்டுப் பல்லாயிர ஜனங்கள் பெண்டுபிள்ளைகள் ஸஹிதம் அந்தத்தேசத்தை நாடிச் செல்லலாயினர்.

"என்மட்டும் நான் இதரர்களைப்போல் ஊரை விட்டுச் செல்லவேண்டிய அவசியமில்லை; இந்த ஊரிலிருந்தும் சில ஜனங்கள் வெளியேறக்கூடும். அவர்களுடைய பூமியெல்லாம் எனக்குக் கிடைக்க எனது பூஸ்திதி சிறிது அதிகமாகும். எனக்கும் இன்னும் கொஞ்சம் நிலம் கிடைத்தால்தான் ஸௌகரியமாயிருக்கும்" என்று நினைத்தான் பாஹோம்.

ஒருநாள் மாலை, பாஹோம் வீட்டில் உட்கார்ந்துகொண்டிருந்தபோது அந்தக் கிராமத்தின் வழியாய்ப் போய்க்கொண்டிருந்த ஒரு குடியானவன் அவன் வீட்டில் நுழைய, பாஹோம் அக்குடியானவனை அன்றிரவு தங்கியிருந்து போகும்படி சொன்னான். இரவு போஜனமான பிறகு இருவரும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அக்குடியானவன் வோல்கா, நதிப் பிரதேசத்திலிருந்து வருவதாகவும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் அங்கே குடியேறிக்கொண்டிருப்பதாகவும் சொன்னான். பாஹோம் கிராமத்தினின்றும்கூடச் சிலர் வந்து அந்தஇடத்தில் குடியேறியிருப்பதாகவும்கூறினான். குடியேறுபவர்களுக்கு நபர் ஒருவருக்குச் சுமார் இருபத்தைந்து ஏகரா பூமி கொடுக்கப்படுவதாகவும் பூமி நல்ல செழிப்பான பூமியென்றும், பயிர்கள் ஓர்ஆள் ஒன்றரை ஆள் உயரம் ஓங்கி வளர்ந்து நீண்ட பளுவான கதிர்கள் கொடுப்பதாகவும் சொன்னான். ஒரு குடியானவன் வெறுங்கையோடு வந்தவன் இப்போது ஆறு குதிரைகள், இரண்டு பசுக்கள் சொந்தத்தில் சம்பாதித்துவிட்டதாகவும் தெரிவித்தான்.

பேராசையெனும் பேய் தலை தூக்கியது; பாஹோம் யோசிக்கலானான். "வெளியூர் சென்று இவ்வளவு சீருஞ்செல்வமுமாய் ஜீவிக்கலாமென்றால் இந்தப் பாழும் கிராமத்தில் நான் ஏன் தொல்லைப்படவேண்டும்? எனது வீடு வாசல் நிலம் நீர் எல்லாவற்றையும் விற்றுப்போட்டுப் பணத்தை எடுத்துக்கொண்டுபோய் அந்த ஊரில் எல்லாம் புதிதாய் வாங்கிக்கொண்டு சள்ளையில்லாமல் வாழலாமே. குடிநெருக்கமானதால் இந்த ஊரில் சதா சண்டையும் சச்சரவும் போராட்டமுமாகவே இருக்கிறது. ஆனால் முதலில் நான் நேரில் போய் அவ்விடத்திய நிலைமையைக் கண்டறிந்து வருவது அவசியம்."

கோடை காலம் சேர அவன் பிரயாணத்துக்குத் தயாரானான். வோல்கா நதி மார்க்கமாய் ஸமாராவரை கப்பல் பிரயாணம் செய்து அதற்கப்பால் முந்நூறு மைல் சென்று அந்த நூதனப் பிரதேசம் சேர்ந்தான். அவ்விடமுழுவதும் குடியானவன் கூறியபடியே நீர்வளம் நிலவளம் செழித்திருந்தது. ஏராளமான நிலம் சாகுபடிக்குத் தயாராயிருந்தது. பிரதியொருவனுக்கும் சமுதாய நிலத்திலிருந்து இருபத்தைந்து ஏகரா கிடைத்தது; கையில் பணமிருந்தால் மேற்கொண்டு வேண்டிய அளவு நிலம் வாங்கிக்கொள்ளலாம். ஏகரா ஒன்றுக்கு இரண்டுரூபாய் தான் விலை.

வேண்டிய தகவல்களையெல்லாம் விசாரித்தறிந்துகொண்டு பாஹோம் தன் ஊர் திரும்பித் தன் நிலங்களையும் வீடுவாசல்கள் முதலியவற்றையும் விற்க ஏற்பாடு செய்தான். நல்ல விலைக்கு நிலங்களை யெல்லாம் விற்றான். மாடு கன்று வீடுவாசல் யாவற்றையும் விற்றான். கிராமக் கூட்டத்தினின்றும் நீங்கிக்கொண்டான். மழைகாலம் முடிந்தவுடன் தன் குடும்ப ஸஹிதம் புறப்பட்டுவிட்டான்.

4

அந்த நூதன தேசத்தையடைந்தவுடன் ஒரு பெரிய கிராமத்தில் குடியேறி அந்த ஊர்க்கூட்டத்தில் தன்னைச் சேர்த்துக்கொள்ள மனுசெய்துகொண்டான். நாட்டாண்மைக்காரருக்குச் சிறப்பான விருந்தொன்று நடத்திவைத்துத் தேவையான தஸ்தாவேஜுகளை யெல்லாம் பெற்றுக்கொண்டான். அவனுக்கும் அவனுடைய மகனுக்குமென வேறு வேறு இடங்களில் சிதறியிருந்த 125 ஏகரா, அதாவது ஐந்துபாகம் சமுதாய பூமி கொடுக்கப்பட்டது. சமுதாய மேய்காலில் கால்நடைகளை மேயத்துக்கொள்ள அநுமதியும் கிடைத்தது. வேண்டிய கட்டடங்களைக்கட்டிக்கொண்டு கால்நடைகளும் வாங்கினான். அவனுக்குக் கிடைத்த சமுதாய நிலமே முன்னர் அவனுக்கிருந்ததைப்போல் மூன்றுமடங்கு அதிகமாயிருந்தது. அதுவும் எல்லாம் நஞ்செய் நிலம். சாகுபடிக்குத் தகுதியான பூமியும் மேய்காலுக்கு யோக்யமான ஸ்தலங்களும் ஏராளமாயிருந்தன. நூற்றுக்கணக்கான பசுக்களும், குதிரைகளும் வைத்துக்கொள்வானகி ஊரிலிருந்ததைக் காட்டிலும் பத்துமடங்கு அதிக செல்வவந்தனாய் விளங்கினான்.

முதல் இரண்டொரு மாதங்கள் வீடுகட்டி வாசல் கட்டி நிலங்களைச் செப்பனிட்டு ஒரு ஒழுங்குக்குக் கொண்டுவரும்வரைக்கும் பாஹோம் மனச்சந்துஷ்டியடைந்திருந்தான். ஆனால் எல்லாம் சீராய் அமர்ந்த பிறகு தனக்கு இருக்கும் நிலம் போதாதெனா அவன் மனதில் குறை ஏற்பட்டது. முதல்வருஷம் தன் பாகச் சமுதாயநிலத்தில் கோதுமை விதைத்தான். நல்ல பலன் கிடைத்தது. அந்தப் பக்கங்களில் கரம்பாய்க் கிடந்த நிலத்திலாவது அல்லது புதிதாய்ச் சீர்செய்யப்பட்ட நிலத்திலாவதுதான் கோதுமை விதைப்பது வழக்கம். அப்புறம் இரண்டொரு வருஷம் கரம்பாய்ப் போட்டபின்னர்தான் மறுபடியும் கோதுமை விதைப்பார்கள். கோதுமைதான் ஏராளமாய்ப் பயிர்செய்ய வேண்டுமெனப் பாஹோம் தீர்மானித்தான். அந்த உத்தேசம் நிறைவேறுவதற்குத் தன் பங்குக்குக் கிடைத்த சமுதாய நிலம் போதவில்லை. பாஹோமைப்போலவே மற்றவர்களும் ஆசைப்பட்டார்கள். இதனால் கலகங்களும் மனஸ்தாபங்களும் ஏற்பட்டன. கடைசியில் சர்க்கார் தீர்வை கட்டமுடியாமல் தவிக்கும் ஏழைக் குடியானவர்களிடமிருந்து அவர்களுடைய பங்குகளைக் குத்தகைக்குக் வாங்கினான். நல்ல பலன் கிடைத்தது. ஆனால் அந்நிலங்கள் வெகு தூரத்திலிருந்ததால் சுமார் பத்து மைல் தூரம் தானியங்களை வண்டிகளில் கொண்டுவரவேண்டியிருந்தது.

சில குடியானவர்கள் சமுதாய நிலமில்லாமல் தங்கள் சொந்தத்தில் நிலத்தை வாங்கிக்கொண்டு அவ்விடத்திலேயே வீடுகட்டிக்கொண்டு தனிகர்களாயிருப்பதைக் கண்டான். தானும் அவர்களைப்போல் சொந்தத்தில் பூமி வாங்கிக்கொண்டு இருக்கவேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று.

நிலத்தைக் குத்தகைக்கு வைத்துக்கொள்வது, கோதுமை பயிரிடுவது, இவ்வாறாக மூன்று வருஷங்கள் கடந்தன. காலம் நன்றாகவே இருந்து வந்தது. பாஹோம் கையிலும் சிறிதுசிறிது பணம் சேரத் தொடங்கியது. இப்படியே ஒரு குறையுமின்றி மனவமைதியுடன் காலங் கழித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அவனைப் பிடித்த பேய் அவனைச் சும்மா விடவில்லை. வருஷப் பிரதிவருஷம் குத்தகை வைத்துக் கொள்ளும் காலத்தில் குடியானவர்களுக்குள் நீ முன் நான் முன், என்று பெரிய போராட்டம். சற்று ஏமாந்தால் ஒருகுழி நிலம்கூடக் கிடைக்காமல் போய்விடும். மூன்றாம் வருஷம் பாஹோமும் இன்னொருவனுமாக ஒரு குடியானவனுடைய நிலத்தைக் குத்தகைக்குப் பேசினார்கள். ஆனால் அக்குடியானவன் அந்நிலங்களை ஏற்கனவே உழுதுவிட்டிருந்ததால் அதைப்பற்றி வழக்கு ஏற்பட்டுக் குடியானவன், கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்யப் பாஹோமுக்கு அவ்வியாஜ்யத்தினால் அதிக நஷ்ட முண்டாயிற்று.

'என்னுடைய சொந்த நிலமாயிருந்திருந்தால் இந்த அவஸ்தையெல்லாம் இல்லாமலிருக்குமே' என்று கருதலானான் பாஹோம்.

அந்த ஊரில் சுமார் 1300 ஏகரா வாங்கிப் பயிர் செய்துவந்த குடியானவனொருவனுக்குக் கஷ்டகாலம் வந்துவிடப் பாஹோம் அவனுடைய நிலங்களைப் பேரம் பேசிப்பேசி 1500ரூபிளுக்கு முடித்துப் பாதி ரொக்கமாகவும் பாதிப் பணம் பிறகு கொடுக்கும்படிக்கும்ஏற்பாடுசெய்தான். இந்தப்பேரம் அநேகமாய் முடியும் சமயத்திலிருக்கும்போது அவ்வூர்வழியாய்ப் போய்க்கொண்டிருந்த ஒருவர்த்தகன் தன் குதிரைக்குப் புல்லுக்காகப் பாஹோமின் வீட்டுக்குள் நுழைந்தான். பாஹோம் அவ்வியாபாரிக்கு நல்வரவு கூறி இருவரும் தேக் கஷாயம் சாப்பிட்டனர். பாஷ்கீர்கள் நாட்டில் தான் 13000 ஏகரா பூமியை 1000 ரூபிளுக்குக் கிரயம்பேசி வாங்கியிருந்ததாகவும், அவ்விடத்

தினின்று தான் திரும்பி வருவதாகவும் அவ்வர்த்தகன் கூறக்கேட்ட பாஹோம் அந்தப் பாஷ்கீர்கள் நாட்டைப்பற்றி அதிகமா யறிய ஆவல் காட்டினன்.

"நிலத்தை வாங்குவது ஒரு கஷ்டமுமில்லை. நான் என்ன செய்தேன் தெரியுமோ? அங்குள்ள தலைவர்களைச் சிநேகஞ் செய்துகொண்டேன். ஒரு பெட்டித் தேயிலை, சுமார் நூறு ரூபில் பெறுமான ஆடைகள், ஜமக்காளங்கள் இவற்றை அவர்களுக்குக் கொடுத்துச் சிறிது சாராய முதலிய பானவகைகளும் தாராளமாய் உதவினேன். கடைசியில் ஏகராவுக்கு இரண்டு பென்ஸ்வீதம் கிரயம் முடித்தேன்" என்று அவ்வர்த்தகன் பாஹோமுக்கு மூல தஸ்தாவேஜ்களையும் காண்பித்தான்.

நிலமெல்லாம் ஆற்றுக் கருகாமையி லிருக்கிறது. நல்ல ஆற்றுப்பாய்ச்சல்; செழிப்பான பூமி. இதற்கு முன் சாகுபடியானதில்லை.

பாஹோம் மேலும் மேலும் கேள்விகள் கேட்கலானன். வர்த்தகனும் விடையளித்தான்.

" அவ்விடத்தில் நீ ஒரு வருஷகாலம் காலால் நடந்தாலும் நடந்து அளவிடமுடியாத அவ்வளவு பூமியிருக்கிறது. எல்லாம் பாஷ்கீர்களுடையது. அவர்கள் யாவரும் சுத்த மூடர்கள். கள்ளங்கபடு ஒன்றும் தெரியாதவர்கள். ஒன்றும் கொடுக்காமல்கூட நிலத்தை வாங்கிக்கொண்டுவிடலாம்."

"சே, என்ன யோசனை செய்தோம். ஆயிரம் ரூபிலைக் கொடுத்து ஆயிரத்து ' மூந்நூறு ஏகராதான் வாங்கி அதனிலும் கடன் கொஞ்சம் வைத்துக்கொண்டு அலைவானேன். நான் இந்த ஆயிரம் ரூபிலை அவ்விடம் எடுத்துக்கொண்டு போனல் பத்து மடங்கு நிலம் வாங்கலாமே" என்று நினைக்கலானன் பாஹோம்.

5

வர்த்தகனைக் கேட்டு அவ்வூருக்கு வழி தெரிந்துகொண்டான். வர்த்தகன் போனவுடன், பாஹோம் தன் மனைவியைக் கூப்பிட்டு வீட்டைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வேலைக்காரனை உடன் அழைத்துக்கொண்டு பாஷ்கீரர்கள் நாடுதேடிப் பிரயாணமானன். வர்த்தகன் கூறியபடி வழியில் ஒரு நகரத்தில் தங்கித் தேயிலைப்பெட்டி யொன்று, ஜமக்காளங்கள், கொஞ்சம் சாராயவகைகள், இன்னும் இதர சில வெகுமதிச் சாமான்கள் முதலியவற்றை வாங்கிக்கொண்டான். சுமார் மூந்நூறு மைல்கள் நடந்து சென்றனர்.ஏழாம்நாளன்றையதினம் பாஷ்கீர்கள் கூடார மடித்திருக்கும் இடத்தண்டை வந்தனர். வர்த்தகன் கூறியது யாவும் உண்மையாகவே இருந்தது. பாஷ்கீர்கள் ஆற்றோரத்தண்டைதான் வசித்திருந்தனர். அவர்கள் நிலத்தை உழுவதுமில்லை; அவர்கள் ரொட்டி சுடுவது மில்லை. அவர்களுடைய குதிரைகளும் கால்நடைகளும் மந்தை மந்தையாய் மேய்ந்துகொண் டிருந்தன. அவர்களுடைய பெண்டுகள் தினத்துக்கு இரண்டுமுறை பால்கறந்து கூமிஸ் என்னும் பானமும் பால்கட்டிகளும் தயார் செய்தனர். புருஷர்கள் தேக்கஷாயம் கூமிஸ் இவற்றைக் குடிப்பதும், இறைச்சிக ளுண்பதும், கேளிக்கைப் பாட்டுகள் பாடுவதும் தவிர்த்து வேறு எவ்வித வேலையும் செய்வதில்லை. ஒருவித கவலையுமின்றி நல்ல திடகாத்திரர்களா யிருந்தனர். கல்வி வாசனை யென்பதே இல்லாத மூடர்கள். ருஷ்யன் பாஷையும் தெரியாது,ஆனல் எல்லோரும் நற்குணம் வாய்ந்தவர்கள்.

பாஹோமைக் கண்டவுடன் அனைவரும் கூடாரங்களை விட்டு வெளிவந்து அவனைச் சூழ்ந்து கொண்டனர். ஒரு துவிபாஷிகன் அகப்பட்டான்; அவன் மூலமாகப் பாஹோம் நிலத்தை உத்தேசித்து வந்தானென அறிந்து கொண்டார்கள். பாஷ்கீர்கள் அதிக சந்தோஷ மடைந்தனர். பாஹோமைப் பிரதான கூடாரத்துக்குள் அழைத்துப்போய் ஜமக்காளங்களும், மெத்தைகளும் போடப்பட்ட ஓர் ஆசனத்தின்மீது உட்காரச் சொல்லி அனைவரும் அவனைச் சுற்றி உட்கார்ந்தனர். தேக்கஷாயம், கூமிஸ், முதலியன பானங்களைக் கொடுத்து அவனுக்கென ஓர் ஆட்டையும் கொன்று ஊன் உணவும் அளித்தனர். பாஹோமும் தான் கொண்டுவந்த தேயிலை, சாராயம் முதலிய வெகுமதிகளை அவர்களுக்கு அளித்தனன். பாஷ்கீர்கள் அதிக சந்தோஷ முற்றார்கள். தமக்குள் வெகுநேரம் பேசிமுடித்துத் துவிபாஷிகனைப்பார்த்துத் தங்கள் பேச்சின் ஸாராம்சத்தைப் பாஹோமுக்கு அறிவிக்கும்படி சொன்னார்கள்.

" இவர்கள் அனைவரும் உம்மிடம் அதிக நட்புப் பாராட்டுகின்றனர். விருந்தாளிகளுக்கு வேண்டிய சகல வஸ்துக்களைக் கொடுப்பதிலும் அவர்கள் செய்யும் மரியாதைக்குப் பதில்மரியாதை செய்வதிலும் அதிக சிரத்தை யுடையவர்கள். நீர் எவ்வளவோ வெகுமதிகள் கொடுத்தீர். இவர்களிடம் இருப்பவற்றில் உமக்கு எவையெவை விருப்பமானவையோ அவற்றை உமக்குக் கொடுக்க இவர்கள் சித்தமாயிருக்கின்றனர்" என்றான்.

" என் மனதுக்கு நிரம்பவும் இயைந்தது உங்களுடைய நிலங்கள்தான். எங்கள் ஊர்களில் ஜனத்தொகையதிகம்.பூமியும் அதிகமாய்ப் பயிரிடப்பட்டுச் சாரமற்றுப்போய்விட்டது. உங்களிடம் நிறைய நிலங்கள் இருக்கின்றன. அவைகளும் அதிக சிரேஷ்டமானவை. அவற்றிற்கு இணையான நிலங்கள் வேறு எங்கும் கிடையாது" என்று விடையளித்தான் பாஹோம்.

துவிபாஷிகன் மொழிபெயர்த்தான். பாஷ்கீர்கள் தமக்குள் சற்றுநேரம் பேசிக்கொண்டனர். பாஹோமுக்கு அவர்கள் பேசியது ஒன்றும் பொருள்படவில்லை. ஆனல் அவர்கள் அதிக ஆச்சரியமடைந்திருப்பதாகவும்,அவர்கள் உரக்கச் சிரித்து ஆரவாரித்ததாகவும் மாத்திரம் அவன் அறிந்துகொண்டான். எல்லோரும் பேச்சையும் தங்கள் குதூஹலத்தையும் சற்றே நிறுத்தித் துவிபாஷிகனைப் பேசச் சொன்னார்கள்.

" நீர் கொடுத்துள்ள வெகுமதிக்குப் பதிலாக உமக்கு எவ்வளவு நிலம் தேவையோ அவ்வளவு நிலம் கொடுக்கத் தயாராயிருப்பதாகத் தெரிவிக்கின்றனர். உம் கையால் நீர் சுட்டிக் காட்டவேண்டியதுதான் தாமதம், அங்கிமிடமே அவ்வளவுநிலமும் உம்முடையதுதான்" என்று சொன்னன் துவிபாஷிகன். பாஷ்கீர்கள் தமக்குள் மறுபடியும் பேசத் தொடங்கினார்கள். சிறிது விவாதமும் நடந்தது. பாஹோம் விவாதம் என்ன வென்று கேட்கத் துவிபாஷிகன் நிலத்தைக் குறித்துச் சிலர் தங்கள் எஜமானரைக் கேட்டுத்தான் வாக்குக் கொடுக்கவேண்டுமென்றும், அவர் இல்லாத சமயம் தாங்கள் ஒன்றும் செய்யக்கூடா தென்றும் சொல்ல, வேறுசிலர் தாமே கொடுத்துவிடலாமென்றும் சொல்லிக் கொள்கிறார்களென்றும் சொன்னன்.

6

பாஷ்கீர்கள் இவ்வாறு விவாதம் செய்துகொண்டிருக்கையில் பெரிய கம்பளிக்குல்லா தரித்த ஒருவர் அவ்விடம் வர அனைவரும் எழுந்து வாய் பொத்தி நின்றனர். இவர்தான் பாஷ்கீர்களின் தலைவரெனத் தெரிவித்தான் துவிபாஷிகன்.

உடனே பாஹோம் நல்ல விலையுயர்ந்த ஆடையொன்றையும் ஐந்துபவுண்டு தேயிலையையும் அவர் முன் வைத்தான். அவர் அந்த வெகுமதிகளை அங்கீகரித்துக்கொண்டு பிரதான ஆஸனத்தில்அமர்ந்தனர். பாஷ்கீர்கள் உடனே அவரிடம் பேசத்தொடங்கினர்.

சற்றுநேரம் அவர்கள் சொல்வதைக் கேட்டுவிட்டுத் தலைவர் அவர்களை மௌனமாயிருக்கும்படி கட்டளையிட்டுப் பாஹோமைப் பார்த்து ருஷ்யன் பாஷையில் " சரி, அப்படியே யாகட்டும் எம்மிடம் ஏராளமான பூமி இருக்கிறது. உமக்கு எந்தப் பகுதி எவ்வளவு வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளலாம். " என்றனர்.

' எனக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு எப்படி எடுத்துக்கொள்ள முடியும்;'ருஜூப்படுத்த நான் இவர்களிடமிருந்து ஒரு தஸ்தாவேஜ் எழுதி வாங்கிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இன்றைக்கு எனது என்று சொல்லிவிட்டு நாளைக்கு மறுத்துவிடக்கூடும்" என்று நினைத்துப் பாஹோம்,

" தங்களுடைய பிரியமொழிகளுக்குப் பெரிதும் வந்தனஞ் செய்கிறேன். உங்களுக்கு ஏராளமான பூமி இருக்கிறது. எனக்கு ஒரு சிறிய பாகந்தான் தேவை. ஆனல் என்னுடைய பாகம் எதுவென்பது எனக்கு நிர்ணயமாய்த் தெரியவேண்டும். ஆதலால் எனது பாகத்தை அளந்து என்னிடம் ஒப்புவிக்கக் கூடாதா? பிறப்பும் இறப்பும் ஈசனது கட்டளையை அநுஸரித்தவை. மஹாராஜாக்கள் நீங்கள் இன்று கொடுத்துவிடுகிறீர்கள். உங்களுக்குப் பின்னர் உங்கள் குழந்தைகள் இல்லையென மறுத்துவிட்டா லென்ன செய்வது ?" எனக் கேட்டான்.

" ஆம் நீர் சொல்வது சரிதான். உமக்கு வேண்டிய பூமியை உங்களுக்குச் சரியானபடி சுவாதீனஞ் செய்து கொடுக்கிறோம் " என்றார் தலைவர்.

" இங்கே ஒரு வர்த்தகர் வந்திருந்ததாகவும், அவருக்கு ஏதோ கொஞ்சம் பூமியைத் தாங்கள் விற்றதாகவும் அதற்கு வேண்டிய கிரய தஸ்தாவேஜ்கள் எழுதிக் கொடுத்ததாகவும் கேள்விப்பட்டேன். என் விஷயத்திலும் அதேமாதிரி எழுதிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன் " என்றான் பாஹோம்.

தலைவரும் பாஹோம் கருத்தை அறிந்து கொண்டார்.

" ஆஹா! அதற்கென்ன, அப்படியே செய்துவிடலாம். ஒன்றும் கஷ்டமில்லை. எங்களுடன் ஒரு கணக்கப்பிள்ளை இருக்கிறார். அவரைக்கொண்டு ஒரு பத்திரமெழுதிப் பட்டணம்போய்ச் சரியானபடி ரெஜிஸ்டர் செய்து விடலாம்" என்றார்.

" கிரயம் என்ன ஆகுமோ ?"

" எங்கள் விலை எப்போதும் ஒரே விலைதான். தினமொன்றுக்கு ஆயிரம் ரூபில் "

பாஹோமுக்குப் பொருள் விளங்கவில்லை.

"தினமொன்றுக்கா ? அது என்ன அளவை ? எத்தனை ஏகராவாகும் அது ?"

"எங்களுக்குக் கணக்கிடத் தெரியாது. நாங்கள் தினக் கணக்குப்படிக்குத்தான் விற்பது வழக்கம். ஒரு நாளைக்குள் நீர் உமது காலால் நடந்து எவ்வளவு தூரம் செல்லமுடியுமோ அவ்வளவு பூமியும் உம்முடையதாகும். அதன் விலைதான் தினத்துக்கு ஆயிரம் ரூபில் என்பது. "

பாஹோம் ஆச்சரியமுற்றான்.

"ஆனல் ஒருநாளைக்குள் வெகுதூரம் போய் வந்துவிட முடியுமே." என்றான் பாஹோம்.

பாஷ்கீர்கள் தலைவர் நகைக்கலானர்.

"நீர் எவ்வளவுதூரம் செல்கிறீரோ அவ்வளவு பூமியும் உமக்கு நிச்சயமாகக் கொடுப்போம். ஆனல் ஒரு நிபந்தனை;நீர் புறப்பட்ட தினமே புறப்பட்ட இடத்துக்கு வந்துசேர்ந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் உமது பணம் பறிமுதலாய்விடும்."

"ஆனல் நான் சென்ற வழி எவ்வாறு அடையாளங் கண்டுபிடிக்கமுடியும்? "

நீர் எங்கிருந்து புறப்பட விரும்புகிறீரோ அந்த இடத்துக்கு நாங்கள் வருகிறோம். நீர் ஒரு மண்வெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டுபோய் வேண்டிய இடங்களில் அடையாளம் செய்துவிட்டு வரலாம். எங்கெங்குத் திரும்புகிறீரோ அவ்விடங்களிலெல்லாம் ஒரு பள்ளத்தை வெட்டிப் புல்லால் மேடு செய்துவிட்டு வாரும். அப்புறம் நாம் ஒரு கலப்பையை யெடுத்துக்கொண்டு போய் எல்லைக்கோடு கிழித்துவரலாம். நீர் எவ்வளவுதூரம் வேண்டுமானலும் சுற்றிவாரும். ஆனல் சூரியன் அஸ்தமிப்பதற்குள் புறப்பட்ட இடத்துக்கு வந்து சேர்ந்துவிட வேண்டும். நீர் எவ்வளவு விஸ்தீர்ணம் சுற்றிவருகிறீரோ அவ்வளவும் உம்முடைய தாகும்."

பாஹோம் சந்தோஷ மடைந்தான். மறுநாள் சூரியோதயமானவுடன் புறப்படுவதாக நிச்சயம் செய்யப்பட்டது. சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு மறுபடியும் கூமிஸ், தேக்கஷாயம் முதலியன பருகிவிட்டுப் பாஷ்கீர்கள் காலையில் அதிசீக்கிரம் குறித்த விடத்திற்கு வந்திருப்பதாகச் சொல்லிப் போனார்கள்.

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்துகொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

கணித சோதிடம்.

கணித ரீதியாய்ப் பலன் கூறுபவர். ஒருவருஷத்திற்கு மாதவாரியாகவோ அல்லது தசாபுக்தியாகவோ பலன் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஒன்பது பலனாக எழுத ரூ. 10. தினப்பலன் ரூ. 20. ஜாதகமில்லாதவர் பேரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அறிவிக்கவும். ஏழு கேள்விக்கு ரூ. 1. பொருத்தம் பார்க்க ரூ. 1. ஜாதகம் குறிக்க ரூ. 2. மரணத்தைப்பற்றி வருஷ மாதந் தேதி நாழியுடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூ. 25. புத்திர சந்தான மில்லாதவருக்குத் தோஷ நிவர்த்தி கூற ரூ. 5. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

' அப்பாஜி சோதிடரை ஓராண்டாய் அறிவேன். அவரது சோதிடப்புலமையும் பலன்கூறும் திறத்தையும் கண்டுள்ளேன். பலன் சரியே நடந்து வருகின்றது' என, திரு T. V. கலியாணசுந்தர முதலியார் கூறுகின்றார்.

அப்பாஜி ஜோஸ்யர்,

321, ஜரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

மலர்வனம்.

காதன் மாதவி

959வது பக்கத் தொடர்ச்சி

கூற்றென்று மணங்கென்று மஞ்சினன்போல், தன்னுணர்வைக் கவர்ந்து கொண்டாளொருத்தியைப் பாராட்டினனிவ்வஞ்சமுடையானென்னும் நினைவினால் மாதவியும், பாங்கியின் மொழிபாய் "அன்னை காணின் என்செய்கோ" வென்னுமச்சமுரைத்துத் தன்னிலை இதுவென அதனெதிர் ஓர் மாயந் தீட்டினள். பின்னரே மாதவியின் பொய்ப்பழிப் பாடல்கள் வந்தனவாதலின் யாதும் கலக்கமின்றித் தன் கருத்தெலாம் இசைநயத்திலும், தனதகத்திடை நிகழ்த்திய கற்பனைக்காதலார் நாடகத்திலும் அமிழ்ந்திருந்த கோவலன், பாங்கன் கேட்பவுற்ற துரைக்கும் தலைமகன் மொழியாய், மெய்யும் மனமும் மறந்து சில பாடினன்:—

பொழிறரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுருவ வில்லிணையே
எழுதரு மின்னிடையே யெனையிடர்செய்தவையே

[சோலைகள் தரும் மணம்பொருந்திய மலர்களும், புதிய மணம் வீசும் மணலும், அப்பெண்ணின் குற்றமற்ற அழகிய மொழிகளும், பருத்த இளமை பொருந்திய அழகிய முலைகளும், முழுமதிபோன்ற அவள் முகமும், வளைந்த வில்போன்ற அவள் இரண்டு புருவங்களும், எழுதுவதற்கரிய மின்னல் போன்ற இடையும், எனக்கு இத் துன்பத்தைத் தந்தனவாகும்.]

திரைவிரி தருதுறையே திருமணல் விரியிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
இருகய லிணைவிழியே யெனையிடர் செய்தவையே

[அலைகள் பரவுகின்ற கடற்கரையும், அழகிய மணல்விரிந்துள்ள இடமும், வாசனை கமழ்கின்ற மலர்களும், நெருங்கி அடர்ந்த சோலையும்,வாசனைவீசுகின்ற சுருண்ட கூந்தலும், சந்திரன்போன்ற அழகிய முகமும், எனக்கு இந்தத் துன்பத்தைத் தந்தனவாகும்.]

வளைவளர் தருதுறையே மணம்விரி தருபொழிலே
தளையவிழ் நறுமலரே தனியவ டிரியிடமே
முளைவள ரிளநகையே முழுமதி புரைமுகமே
இளவள ரிணைமுலையே யெனையிடர் செய்தவையே.

[சங்குகள் கண்வளரும் கடற்கரையும், வாசனைவீசுகின்ற சோலையும், கட்டு அவிழ்கின்ற வாசனையுடைய மலரும், தனித்து அவள் உலாவும் இடமும், இறகின் குருந்துபோல் வளர்ந்துள அவளது பற்களும், முழுமதிபோன்ற அவள் முகமும், இளமையொடு வளர்ந்த அவளது இரு முலைகளும், எனக்கு இந்தத் துன்பத்தைத் தந்தனவாகும்]

புதுக்காதல் புக்குள வம் மகளின், திருமொழியும் வனமுலையும் மதிமுகமும் முரிபுருவமும் மின்னிடையும் புரிகுழலும் கயல்விழியும் இளநகையும் தன்னை இடர்செய்தன வென, மலரையும் மணலையும் துறையையும் பொழிலையும் திரியிடத்தையும் விளித்து அவைகள்பால் தன் துன்பத்தைக் கூறி இரக்கம் வேண்டினனென்றே, மற்று அவளொடு பயின்ற மலர் மணல் பொழில் இடம் முதலிய இயற்கையமைப்பும்,அவளது அவயவங்களின் அழகும் ஒன்று சேர்ந்து தனக்குச் சதிசெய்தன வென உரைத்தானென்றே, எவ்வாறாயினும் ஏழை மாதவியின் இதயத்தை முரித்ததால் இப்பாடல்களுக்கு முரிவரி என்று முன்னோர் இட்டபெயர் தக்கதே யாயது. "இவன் கண்விட் டகலாது நிற்றலாலோ, முழுமதி புரை முகத்தைப் பாடல்தோறும் மறவாது மகிழ்ந்தனன்" என்னச் சாம்புவாள் குருதிநீர்க்கக் கோவலன், ஆற்றாமைகூறித் தனதினியாளை அணைத்திடவழைக்கும் தலைவனுக்குரிய பாடல் வகுத்தனன்:—

கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் னையர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் னீயு
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பார
மிடர்புக் குகுமின் னிடையிழவல் கண்டாய்.

[நினது தமையன்மார் கடலிற் புகுந்து மீனின் உயிரைக்கொன்று வாழ்கின்றவர். நீயும் கண்டோர் உடலிலே புகுந்து அவரது உயிரைக் கொன்று வாழ்கின்றாய். நீயும் நின் குலத்தோரும் இப்படிக் கொலை செய்கின்ற பாவத்தால், உனது இடை உடைந்து நீ கெடுவாய். அதுவுமன்றி வலிபுகுந்து அடங்காத உனது விரும்பத்தகும் முலைகளோ மிகவும் பாரமானவை. ஆதலின் வீணே உன் இடையை இழந்துவிடாது, எனது ஆற்றாமைதீர என்மீது சார்ந்து கொள்]

கொடுங்கண் வலையா லுயிர்கொல்வா னுந்தை
நெடுங்கண் வலையா லுயிர்கொல்வை மன்னீயும்
வடங்கொண் முலையான் மழைமின்னுப் போல
நுடங்கி யுகுமென் னுசுப்பிழவல் கண்டாய்.

[வளைந்த கண்களையுடைய வலையால் உன் தந்தை,உயிர்களைக் கொல்கின்றான். நீண்ட கண்ணின் பார்வையாம் வலையால் நீயும் உயிர்களைக் கொல்கின்றாய். முத்து வடங்களணிந்த உன் முலைகளின் பாரத்தால் மேகத்திலுள்ள மின்னலைப்போலத் துவண்டு உடையும் உனது மெல்லிய இடையை இழவாதே—என் மீது சார்ந்துகொள்]

ஓடுந் திமில்கொண் டுயிர்கொல்வர் நின்னையர்
கோடும் புருவத் துயிர்கொல்வை மன்னீயும்
பீடும் பிறரெவ்வம் பாராய் முலைசுமந்து
வாடுஞ் சிறுமென் மருங்கிழவல் கண்டாய்.

[உனது தமையன்மார், கடலில் ஓடுகின்ற தோணியைக் கொண்டு உயிர்களைக் கொல்வர். நீயும் வளைந்த உன் புருவத்தைக்கொண்டு உயிர்கொல்வாய். பிறர்படும் நோயையும் அதைத்தீர்ப்பதே உனக்குப் பெருமை ஆகும் என்பதையும் நீ பார்க்கின்றாய் அல்லை. முலையைச் சுமந்து துவள்கின்ற உனது சிறிய இடையை இழவாதே—என்மீது சார்ந்து அதனைக் காத்துக்கொள்]

மருண்டமனத்தினளாதலால்மாதவிக்குக்கோவலன் மொழி யாவும் கழுதெனத் தோன்றின. 'பீடும் பிறர் எவ்வம் பாராய்' என்னற்கு அவள், 'உன்னுடைய உயர்வையும், உன்போன்ற மாதரார் பிறர்தம் குறைவையும் நீ யறியாய்'' என்று பொருள்படுத்தி அம் மாற்றாளோடு தன்னை ஒப்புநோக்கித்தன்பால் இழிவே காண்கின்றான் இக்கொடியோன் என உன்னினள். மாலை கண்டு தான்படுந் துன்பத்தையும், தன்னுடைய காதலனை அடைந்திராததால் உற்ற ஆற்றாமையையும் தோழிக்குரைக்குங் கிளவிகள் பொழிந்து மாதவி பாடுகின்றாள்.

இளையிருள் பரந்ததுவே யெற்செய்வான் மறைந் [தனனே
களைவரும் புலம்புநீர் கண்பொழீஇ யுகுத்தனவே
தளையவிழ் மலர்க்குழலாய் தணந்தார்நாட் டுளதாங் [கொல்
வளைநெகிழ வெரிசிந்தி வந்தவிம் மருண்மாலை

[இளைய இருள் எங்கும் பரவியதே, பகல் செய்கின்ற சூரியன் மறைந்தனனே. நீக்க முடியாத என் தனிமையால் உண்டான துன்பத்தால் வரும் நீரை என் கண்கள் பொழிந்து சொரிகின்றனவே. கட்டு அவிழ்கின்ற மலர்களை அணிந்த கூந்தலையுடைய என் தோழியே, என் கைவளை நெகிழும்படி என் உடலை உருக்கும் நெருப்பைச் சிந்தும் இந்த மருட்சிக்குக் காரணமான மாலைப்பொழுது, இங்கு மாத்திரந்தான் உளதோ, அல்லது நம்மைப் பிரிந்திருக்கின்ற அக்காதலர் உறைகின்ற நாட்டிலும் உளதோ,

சொல்—(அங்கும் உளதாயின் தானும் இம்மாலையால் ஆற்றாமை உற்று என்பால் வந்தெய்த முயலாரோ) !

கதிரவன் மறைந்தனனே காரிருள் பரந்ததுவே
யெதிர்மலர் புரையுண்க ணெவ்வநீ ருகுத்தனவே
புதுமதி புரைமுகத்தாய் போனார்நாட் டுளதாங்கொல்
மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தவிம் மருண்மாலை

[சூரியன் மறைந்தனனே, கரிய இருள் எங்கும் பரவியதே, இம்மாலைக்காலத்திற்கு எதிரே தோற்றுகின்ற குவளைமலர்போன்ற என் மையுண்டகண்கள் துன்பநீர் பெருக்குகின்றனவே. புதிய சந்திரன்அனைய முகமுடைய என் தோழியே! நம்மைவிட்டுப்போனவர் நாட்டிலும், சூரியனை விழுங்கி அதனினும் வெப்பமுடைய இச்சந்திரனை வெளிப்படுத்தும் இந்த மருட்சிக்கு இடமான மாலைப்பொழுது என்பது உண்டோ சொல்]

பறவைபாட் டடங்கினவே பகல்செய்வான் மறைந்த [னனே
நிறைநிலா நோய்கூர நெடுங்கணீ ருகுத்தனவே
துறுமல ரவிழ்குழலாய் துறந்தார்நாட் டுளதாங்கொல்
மறவையா யென்னுயிர்மேல் வந்தவிம் மருண்மாலை.

[பறவைகள் பாடாமல் அடங்கினவே. சூரியன் மறைந்தனனே: என்மனத்தை அடக்கினும் அது நிறையோடு நிற்க இயலாத இக்காமநோய் மிகுதலால் என் பெரிய கண்கள் நீர் சொரிகின்றனவே. அடர்ந்தமலர்கள் அவிழ்கின்ற கூந்தலையுடைய என் தோழியே, நம்மை விட்டுப்போனவர் நாட்டிலும், கொலைசெய்வதாய் என்உயிர்மேல் படர்கின்ற மருட்சிக்கு இடமான மாலைப்போது உளதோ சொல்]

மாலை தனக்கு மறலியாய் வந்ததென மாதவிதான் மாயஞ் செய்தாளெனின், அதனிற் காற்றுள்போல் அவள் இசைத்த மாற்றம் கோவலனுக்குக் கூற்றாய் வந்ததென் றுரைத்தல் வேண்டுமோ !

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி படனம்.

947வது பக்கத் தொடர்ச்சி.

திருவாய்மொழியைத் தக்காலம் திருக்கோவில்களில் பிராமணர்களே ஓதி வருகின்றார்கள். ஏனையவருக்கும் சாற்றக்கூடு மெனினும் அங்ஙனம் சாற்றுவதுநடப்பிலில்லை சங்கேதத்தை ஒட்டி வைணவர்களிலுங்கூட''அத்தியாபாகர்கள்''என்று தெரிந்தெடுத்திருப்பவர்கள் தவிர மற்றுள்ளார் ஸேவிக்கின்றாரல்லர். பத்து எட்டுப் பெயர்களுடன் ஒத்து ஸேவிக்கவேண்டிய அவசியத்தை முன்னிட்டுத் தம்மோடொத்துக் கற்றுப் பயின்று அமைந்தவர்களையே ஏனைய பயின்றுளார் தம்முடைய கோஷ்டியில் சேர்த்துப் படனம்செய்ய ஏற்கிறார்கள். இவ்வாறாய படன முறையை "அத்தியாபாகம்" என்று உபசாரமாய்க்கூறுவார்கள். தற்காலத்தில் நடைபெறும் அத்தியாபாக ரீதியைக் காதுகொண்டு கேட்பவர்கள் கொஞ்சமேனும் அர்த்த விமர்சம் செய்தவர்களாயிருந்தால் நிரம்ப விஸனிப்பார்கள். வெகு இடங்களில் அத்தியாபாகம் சாற்றுவதில் இப்பாட்டுகள் படும் சிதைவும் நலிவும் கண்டநமும் துயரப்பாடும், ரஸிகர்கள் ஸஹிக்கமாட்டார்கள். தற்காலம் சில க்ஷேத்திரங்களில்மாத்திரம் சீர்திருத்தமாய் ஸேவை செய்கிறார்கள். யாம் கேட்டுளவரையில் திருவகீந்திரபுரத்திலும் வெண்ணத்தங்கரையிலும் இப்படனம் ஒருவாறு சீர்திருத்தமாய் நடைபெறுகிறது. இதிலும் நன்றாக நடைபெறலாம். சங்கேதத்தைச் சற்று மாற்றினால் இனிமையாகவே கேட்பவர் மனம் உருகச் சாற்றலாம். ஆழ்வார்களே, நடைபெறும் படனத்தைச் திருச்செவி சாற்றி யிருந்தால் என்னபாடு படுவார்களென்று கூற அவசியமில்லை. இப்போது காணும் அச்சுப் புத்தகங்கள் முன் ஏட்டுச் சுவடியை அனுசரித்திருத்தலே வேண்டும். ஒவ்வொரு பதிகத்துக்கும் இராகம் பண் அச்சுப் புஸ்தகங்களில் வரையப்பட்டுள. இப்போது சாற்றுவது இப்படி இட்டுள்ளபடியன்று. இப்போது நடையாடும் விதம் யார் ஏற்படுத்தினரென்று அறிய இயலவில்லை. ஆனால் ஸ்ரீரங்கத்தில் அரையர் என்பவர் பிரதிதினம் கைத்தாளத்துடன் இப்பாசுரங்களைச் சாற்றும்போது ஒரு ராகமிட்டு ஓதுகிறார். இவர் ஒருவிதம் பழைய மரபை அனுசரித்துளாரோ வென்று சம்சயிக்கலாம்.

இவர் சாற்றும் முறையும் பழைய ஏட்டுப்பிரதிகளிலிட்டுள்ள ராகங்களை அனுசரித்ததன்று. ஆகையால் தொன்றுதொட்டு வந்த பழைய ரீதியை அறியச் சாத்தியமில்லை. பாட்டுகள், ராகத்திலும் பண்ணிலும் சந்தத்திலும் படுமிடர்ப்பாடு போதாதுபோல் மற்றொரு துன்பத்துக்கும் ஆளாகியுள. "முதலடிஸேவை" என்று பெயரிட்டுக்கொண்டு பலவிதங்களாய் இந்தத் திவ்விய பாசுரங்கள் உருவழிந்து கைகள் கால்கள் அற்ற நொண்டிகள்போல் உடல்கள் துண்டுபட்டு ''ஸேவை'' என்றும் ''சாற்றுமுறை'' என்றும் உருளலாகின்றன. இந்தத் திவ்விய பிரபந்தங்கள் வேதமந்திரங்கள்போல் பாவனங்களென்றும் பாபஹரமென்றும் ஆஸ்திகர்கள் நினைப்பதே இவைகளுக்கு இவ்வாறு வந்த கேடுக்கு ஹேது. நூறோ அல்லது ஆயிரமோ ஸேவித்தால் புண்ணியமென்று கருதி அது முழுவதும் நடைபெற அவகாசப்படாவிட்டால் ஓரடி ஸேவையாகவாவது எடுத்துள்ள சங்கல்பத்தை நிர்வஹிக்கிறார்கள். அது அர்த்த உணர்ச்சிக்கு ஒரு விதத்திலும் ஒவ்வாது என்று கூறவேண்டியதில்லை—அடிதடிச் சண்டையோ எதிரெதிர் ஏசலோ என்று இந்த முறையை அறியாதவர்கள் எண்ணக்கூடும். சிவபெருமான் திருக்கோவில் கொண்டிருக்கும் திவ்விய ஸ்தலங்களில் "ஓதுவார்" என்ற சில பண்காரார்களே தேவாரத்தை ஓதிவருகிறார்கள். இவர்களில் சிற்சிலர் வெகு மன உருக்கமாய் அடியார்கள் தேவாரத்தை ஓதி எல்லாரும் கொண்டாடும்படி புகழ் வாய்ந்திருக்கிறார்கள். இவர்கள் ஓதும்முறை ஒருவழியாய் அமைந்துள்ளதேனும் அவரவர் சுயபக்திக்கேற்ப நீட்டியும் குறுக்கியும் ஆதரம்பற்றித் தீங்குறவில் அமைக்க இடமுண்டு என்று சில ஓதுவார்களின் கீர்த்தியால் நாம் ஊஹிக்கிறோம்.

கௌசிக சிரோ கல்பம்

உங்கள் சிரேகத்திற்கு மிகவும் ஆரோக்யத்தைத் தரக்கூடிய தைலத்தை நீங்களே செய்து உபயோகியுங்கள்.

போலித்தைலங்களையும் குணமற்ற எண்ணெய்களையும் (Hair Oils) விலைகொடுத்து வாங்கி ஏமாராதீர்கள்.

கௌசிக சிரோகல்பத்தைப் பசும்பாலில் கரைத்துச் சரியளவு சுயமான நல்லெண்ணெய் சேர்த்து நெருப்பில் கொதிகவைக்க ஜலம் பூராவும் சுண்டிச் சுத்தமான தைலம்மட்டும் தனியாக நிற்கும். இத்தைலத்தை எடுத்து ஒருமண்டலம் உபயோகிக்க,மண்டையிடி ஒற்றைத்தலைவலி கண் எரிச்சல் மூளைக்கொதிப்பு இன்னும் சிரம் நேத்திரங்கள் சம்பந்தமான எல்லாவியாதிகளும் போய்விடும்.

பாக்கெட் ஒன்றிற்கு விலை அணா, 8, தபாற்கூலி வேறு. இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை,

மனேஜர்:—சேலம் ஸ்டோர்ஸ்,
சேலம்—SALEM.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

21. கடிமணப் படலம்.

தான்தோழத் தேய்வ மில்லாத் தேய்வத்தின்
தமியர் யாரே.

சீதையு மிராமனுந் தனித்தனிப் பிரிந்திருக்கத் தரிக்கிலாய் ஒருவரை யொருவர் நயந்து பன்னு மெல்லேயில் அன்னு ரிரங்கலு மற்றைநாளிரவு மொருங்கே விடிந்தன. விடியவே,

அஞ்சன வொளியானு மலர்மிசை யுறைவாளும்
எஞ்சலின் மணநாளேப் புணர்குவ ரெனலோடும்
செஞ்சுட ரிருள்கீறித் தினகர ஞெருதேர்மேல்
மஞ்சனே யணிகோலங் காணிய வெனவந்தான்.

[மைபோன்ற ஒளியுடைய திருமாலும் தாமரையில் வசிப்பவளாகிய இலக்குமியும், எவ்விதக் குறைவுமற்ற திருமணம் நாளைப் புரிந்துகொள்வர் என்பது தெரிந்த சூரியன், தனது சிவந்த கிரணங்களால் இருளைக் கீறிக்கொண்டு, தன்குல மைந்தனைக் கலியாணகோலத்தில் காணவேண்டுமென்று வந்தா னென்னும்படி, தன் ஒப்பற்ற தேர்மேல் வந்தான்]

வருதலும் மிதலேமா நகரெலாம் முன்னெருகாலுங் கண்டிராத் தனிப்பேருவகை மிக்கதோர் தன்மைத்தாயது. பு... நகரணிவீரென்று மன்னன் முரசறைவித்த வண்ணம், அக்கன்னிநன் னகருறைமக்கள் கமுகும் கதலியுந் தோரணங்களும் நட்டனர்; பூரணகும்பங்களும், பொற்பாலிகைகளும் வைத்தனர்; பந்தல்கள் வேய்ந்தனர்; கொடிகள் தூக்கினர்; தெருக்களில் சந்தனஞ் சிந்தினர், செழுமலர் சொரிந்தனர்; சுண்ணந் தூவினர். இவ்வகைத் திகழ்தர அவ்வணிநகர் அமைத்தாராக அன்னமென் நடையாரும் மழவிடையனேயாரும் தக்கதோர் கோலந் தம்மையுஞ் செய்துகொள்வாராகிக் கலவைகளும் மலர்களும் திலகமும் அணிந்தனர்; பொன்னினும் மணியினும் அணிகலன்கள் புனைந்தனர்; இலவிதழ் பொலிகோலம் எழில்பெற இட்டனர். இயற்கையினழகோடு இன்னபடி புனைவதும் புரிந்துகொண்ட,

விடநிகர் விழியாரு மமுதெனு மொழியாரும்
கிடைபுரை இதழாரும் கிளர்நகை வெளியாரும்
தடமுலே பெரியாரும் தனியிடை சிறியாரும்
பெடையன நடையாரும் பிடியென வருவாரும்

ஆய, மங்கையர்களுடன் குஞ்சர மதுபோன்ற மதுகைவீரர் தேரிற் சிவிகையிற் பரியில் கரியில் களிப்புடன் எய்தினர். மன்னவர் துன்னினர், மறையவர் நிறைந்தனர். சென்னியர் கணிகையர் சேர்ந்தனர். அரிவையர் சிலர் நாடகவின்று தம் இளநகைகளால் ஆடவ ருயிர்கவர்ந்து நின்றனர். குண்டலம் வெயில் வீசக் குரவைகள் ஆடினர் ஒரு புறம். கலேகள் தெரிந்தனர்; இன்னமுதட் டளித்தனர்.

திருமண நல்வேளே வந்தெய்துகின்றது. சனகனும் தயரதனும் தத்தங் கிளேகள்சூழ்தர வியன்பெரு மண்டபம் வந்தெய்தினர். அன்னவேளேயில் மணமகன் கோலஞ் செய்துகொள்வதைக் கம்பர் சிறப்புறச்செப்புகின்றனர்.

யாவுமாய் யாதினு முயர்ந்ததாய் எங்குமுள வப்பரம்பொருள் இங்கோர் இராமனுய் வந்து மானுடமுறைப்படி மணம் புரிவதென்பதும், திருமணக் கோலங்கொள்வ தென்பதும் நுனித்து நோக்கின் சிறிது பரிகசித்தற் கொத்தவொரு கொள்கையாகும். ஆதலின், அராவணே துறந்துபோந்து அயோத்தி எய்தியஇராகவன் செய்கையை இயம்புவான் தொடங்கிய கம்பர்,

சங்கினந் தவழ்கட லேழிற் றந்தவும்
சிங்கலி லருமறை தெரிந்த தீர்த்தங்கள்
கங்கையே முதலவுங் கலந்த நீரினல்
மங்கல மஞ்சன மாபி னுடினுன்.

[சங்குகள் தவழ்கின்ற எழு கடல்களிலிருந்து கொணர்ந்த நீருடன், கெடுதல் இல்லாத அருமையான வேதங்கள் அறிந்து செப்பிய கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களேயும் கலந்து இராமன் மங்கள ஸ்நானம் விதிப்படி செய்தான்]

என்று அவன் திருமஞ்சன மாடியதையும்,

என்றநான் முகன்முதல் யாரும் யாவையும்
நின்றபே ரிருளினே நீக்கி நீணெறி
சென்றுமீ ளாக்குறி சேரச் சேர்த்திடு
தன்றிரு நாமத்தைத் தானுஞ் சாற்றியே

[பிரமன் முதல் யாரும் யாவையும் சூழப்பெற்றிருக்கின்ற அஞ்ஞானமாகிய இருளேச் சூரியன்போல் நீக்கி, முத்தியின் நீண்டவழி சென்று பிறகு பிறவியில் மீளாத பரமபதத்தில் பொருந்தச் சேர்த்திடும் தன்னுடைய திருப்பெயரைத் தானுமே ஜபித்தான்]

என்று அவன் எட்டெழுத்து மந்திரம் ஜபித்ததையும்,

கோதறு தவத்துத்தன் குலத்து ளோர்தொழும்
ஆதியஞ் சோதியை யடிவ ணங்கினுன்

[குற்றமற்ற தவமுடைய தன் குலத்தவர் வழிபடும் பரஞ்சுடரின் விக்ரகரூபமாகிய நாராயணனது பாதங்களே வணங்கினுன்]

என்று அவன் தெய்வ வழிபாடு செய்ததையும், குறிக்குங்கால், "என்னே, இவ்விராமன் செயல்! ஏனேயோர்க்கு எல்லாமிருக்க, இவனுக்குத் தன்கால் வழிந்த நீரன்றி ஆடுதற்கில்லே, தன் பேரன்றிச் சபித்தற்கில்லே, தன்னேயே யன்றி வணங்குதற்கு மில்லே, கண்டீர்" என மணமகனே இந்நாள் உலக இயற்கைக் கிணங்க ஒருவாறு பரிகசஞ் செய்கின்றார். "இருகை குவிக்கவெனில் நானும் என் உளம் நிற்றி நீ, நான் கும்பிடும்போது அரைக்கும்பிடாதலால் நான் பூசை செய்தல் முறையோ" வெனத் தாயுமானவர் நாணினுரேனும் இவ்விராமன் இன்று தனக்கே முழுக் கும்பிடு இட்டுக் குவிக்க வேண்டியதாயிற்று. தம்மைப் படைத்த பரம்பொருளேக் காட்டினுமோர் பெருநலம், மனிதர்க்கு வாய்த்துளது. வழிபடுங் கடவுளேனும் அரும்பெருஞ் செல்வம் மனிதருக்கிருக்க வக் கடவுளுக்கு அச்செல்வம் இல்லயே!

பின்இராமன் கலவைகள் அணிந்து அலங்கல் சூடி,

ஏதமி லிருகுழை யிரவு நண்பகல்
காதல்கண் டுணர்ந்தன கதிருந் திங்களுஞ்
சீதைதன் கருத்தினேச் செவியி னுள்ளுறத்
தூதுசென் றுரைப்பன போன்று தோன்றவே

[சூரியனும் சந்திரனும், பகலும் இரவும் சீதை இவன்பால் கொண்டிருந்த காதலினளவைக்கண் டுணர்ந்தனவாதலால், அவளது கருத்தை இவன் காதோடு இரகசியமாய் உரைக்கவந்த தூதர்கள்போல் இரண்டு குற்றமற்ற குண்டலங்கள் அணிந்தான்]

இன்னவாறு அணிவன அணிந்து உடுப்பன வுடுத்து,

இனிப்பாரந் துலகினே யளப்ப தெங்கெனத்
தனித்தனித் தடுப்பன போலுஞ் சால்பின
நுனிப்பரு நுண்வினேச் சிலம்பு நோன்கழல்
பனிப்புறுந் தாமரைப் பாதம் பற்றவே.

['மாவலியின்பால் மூவுலகையும் அளந்துகொண்டு ஆய்விட்டபடியால், இனிச்சென்று இவ்வுலகினில் அளப்ப

தற்கு இடம் எங்கு உளது' என்று இராமன் நடக்குந்தோறும் தனித்தனித் தடுப்பனபோலும் சால்புடையனவும், உணர்வதற்கரிய நுண்ணியவேலப்பாடுகள் அமைந்தனவும் ஆகிய சிலம்புகள், தனதுகுளிர்ந்த தாமரைபோன்ற பாதங்களேப் பற்றப் பூட்டிக்கொண்டான்]

இத்தகையதோர் கோலங்கொண்ட பெருமகன் கம்பரது கண்கள் முன் நிற்கலாயினுன். சீதையினது அழகை மறைத்தேனும், அவளுக்கு அழகுசெய்வதென்னு மொன்று ஒருவாறு இயன்றதாயிற்று. அதனேக் கம்பர் இயம்பவும் இயைந்தார். மற்று,

முப்பரம் பொருளுக்குண் முதலே மூலத்தை
இப்பரந் துடைத்தவ ரெய்து மின்பத்தை
அப்பனே யப்பினு ளமிர்தந் தன்னேயே
ஒப்பனே யொப்பனே யுரைக்க வொண்ணுமோ

[மூன்று பரம்பொருள்களுக்கும் முதலும் மூலமும் ஆய இவனே, இவ்வுலக பாரத்திலிருந்து நீங்கியவர்கள் அடையும் இன்பத்தை, திருவேங்கட முடையானே, நீரினுள் இருக்கும்சுவையையே போன்றவனே நோக்கி, இவன்கொண்டுள கோலம் எத்தகையதென்று உரைக்கக் கூடுமோ]

என்று உற்றதோர் வியப்பிற்கு உள்ளம் ஈந்து கம்பர் சிறிதுபோது வெற்றுடம்பாய் நிற்கின்றனர். கடவுட்சுவைஇன்னதென்று துய்த்துணர்ந்தவராதலாற்றான், "அப்பினுள் அமிர்தந்தன்னேயேஒப்பனே" என்னும்பிரிநிலே ஏகாரத்துடன் உவமை கூறும் புலமை இவர்க்கு வாய்த்தது. தெள்ளிய நீரிற்குச் சுவை யொன்றுளதெனினும், அது நாவின் உணர்ச்சிக்குரிய அறுவகையினுள் அடங்கியதன்று. நீர்வேட்கை தணிவதற்கு நீரே வேண்டும். வேறென்றால் தாகந் தீர்வதென்பதில்லே. வேறுபல இல்லாமல் அமையலா மெனினும் நீரின்றி மாநிலத்தோர்க் கில்லேயாதலால் எத்தகையினேர்க்கும் இன்றியமையாதது தண்ணீரே. பின், வசிட்டரும், இராமனது பெருமையைப் பகருங்கால், "கற்றவரும் கற்றிலாதவரும் உண்ணு நீரினும் உயிரினும் இவனேயே உவப்பார்" என்று கம்பரது கருத்தையே கொண்டு உரைக்கலாகின்றார்.

இன்னதோர் தன்மையனுன இராமன், விரதமறைப் பொருள் மெய்ந்நெறி கண்ட பரதன், அறம் பொருளின்பம் வீடெனும் நான்கும் அந்தத்தில் ஒரே தன்மையன வாவதுபோல் தம்மில் ஒத்த நான்கு குதிரைகள் பூட்டிக் கொணர்ந்த மணிநெடுந் தேர்மிசை யமர்ந்து, அப்பரதனே கோல்கொண் டுய்க்கவும், மற்றிரு தம்பியர் கவரி வீசவும் மன்றல்மண்டபம் வந்தெய்தித் தந்தை முனிவரர் முதலியோரை முறைமையின் வணங்கி மணமனே யமரலும், மூவேழுலகினும் இணையிலாப் பேரழகுவாய்ந்த சீதையும் அவனருகணேந்தனள். ஒன்றிய போகமும் யோகமும்போல் இராமனும் சீதையு மிருக்க,

கோமகன் முன்சன கன்குளிர் நன்னீர்
பூமக ளும்பொரு ளுமென்ன நீயென்
மாமக டன்னெடு மன்னுதி யென்னுத்
தாமரை யன்ன தடக்கையி னீந்தான்.

[அரச குமாரனுக்குமுன் ஜனகன் நின்று, "பூமகளும் பொருளும்போல் நீஎன் மாமகளுடன் நிலேபெற்று வாழ்க" என்று அவனது தாமரைபோன்ற பெரியகையில் குளிர்ந்த நீரை வார்த்துக் கன்னிகாதானஞ் செய்தான்]

அந்தணர் ஆசியும், மாதர் இசைத்த பல்லாண்டும், மன்னவர் வந்தனேயும், வானவர் வாழ்த்தொலியும், சங்கவாத்தியங்களும் முழங்கின, எங்கணும் மலர் மாரி சொரிய இராமன், வசிட்டன் சடங்கு காட்ட அக்கினி காரியங்கள்யாவும் விதியின்புரிந்து தையலின் தளிர்க்கை தன் தடக்கை பிடித்தான். பிடித்து இருவரும் மாறுபிறப்பின் உடம்பு உயிரைத் தொடர்வதை யொக்க நடந்து அங்கியை வலம்வந்தனர். பின்,

இலங்கொளி யம்மி மிதித்தெதிர் நின்ற
கலங்கலில் கற்பி னருந்ததி கண்டார்.

வசிட்டனேடு அருந்ததியும் வந்திருப்பாளாதலின், இம்மணத்தில் அருந்ததி காண அண்ணுந்து நோக்க வேண்டியதில்லே என்பது தோன்ற 'எதிர் நின்ற' அருந்ததி என நயமுற நவில்கின்றார். அம்மி மிதித்தல் என்பது அகலிகையின் சரிதத்தை மணமகட்கு நினைப்பூட்டி அவளேக் கற்பின்பால் நிலேக்க வைக்கும் மரபுபற்றி நிகழ்கின்றதென்பதற்குஇம்மணத்தில் இடமில்லே. அவளுடைய சரித்திரம்முடிவுற்றுச் சிறிது நாட்களே ஆகியிருத்தலால் இதற்குள் அது சாத்திர வழக்கத்தில் சேர்ந்திராது. மேலும் கோதமன் தன் மனேவியோடு அத்திருமணங் காண வந்திருப்பினு மிருக்கலாம். அவளுக்கெதிரே இதைச் செய்து அவள் மனம் நோகக்காண எவரும் நினைத்திரார்.

மற்றுள செய்வன செய்து மகிழ்ந்து
முற்றிய மாதவர் தாண்முறை சூடிக்
கொற்றவ னேக்கழல் கும்பிட லோடும்
பொற்றொடி கைக்கொடு நன்மனே புக்கான்

கலேகள் முதல் வேலேயீறுக யாவும் ஆர்த்தன. எவ்வெவருளத்திருந்த வுவகையும் அளப்பரியது. மணமக்கள்வந்து கைகேசியின் பாதங்களில்தாழ்ந்து, கோசலேயின் அடித்துணேயைச் சூடி, சுமித்திரையின் பாதங்களேத் தொழுது பணிந்தனர். அருந்ததி சீதையினழகைக் கண்டு உருகினளாய், "நன்மகனுக்கு இவள் நல்லணி" என்றாள். தயரதன் மனேவியர் அறுபதினுயிரரும் சீதையைத் தழுவிக் கண்களு மனமுங் களிப்ப, "இவளேக்கண்ட கண்களுக்குப்பெண்ணெனத்தோன்றத் தகுந்தவர் வேறு எங்கு உளர்" என அவளேப் பாராட்டினுர். பொன்னும் அணிகலன்களும் கன்னியர் கூட்டமும் ஆடையும் சீதைக்குக் கணக்கின்றி யாவரும் பரிசளித்தனர். பிறகு,

நூற்கட லன்னவர் சொற்கட னேக்கி
மாற்கட லன்ன மனத்தவ ளோடுங்
காற்கடல் போற்கரு னேக்கடல் பண்டைப்
பாற்கட லன்னதொர் பாய லணேந்தான்

இத்திருநாளிலே நல்ல ஓரையில் இலக்குமணன் முதலிய தம்பியர் மூவரும் ஊர்மிளே முதலிய மூவர் மங்கையரை மகிழ்வுற மணந்துகொண்டனர்.

வேட்டவர் வேட்டபின் வேந்தனு மேனுள்
கூட்டிய சீர்த்தி கொடுத்தில னல்லால்
ஈட்டிய மெய்ப்பொரு ளுள்ளன வெல்லாம்
வேட்டவர் வேட்டவை வேண்டளவு ஈந்தான்

விண்ணும் மண்ணும் வீந்தது தீவினே, யென மகிழ்வுற்றது. ஓங்கியதறமெனும் உவகை, உவகையே கொண்டாலெனப் பொலிவுற விளங்கு மம் மிதிலேமா நகரில் மன்னவர் கிளேஞரோடும் அளவளாவி வைகினுர்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

வர்த்தமானம்

கவர்ன்மெண்டு அறிக்கை:—சென்னை கவர்னர். சட்ட சபையின் காலத்தை இன்னுமொரு 6 மாதம் ஒத்திவைத்திருக்கின்றார் என்ற கவர்ன்மெண்டு அறிக்கையொன்று எமக்குக் கிடைத்துளது.

***

ஸ்வாமி சீதாநந்தர்:—'சமாச்சார்' என்ற பத்திரிகையில் ஜாதித்துவேஷம் ஏற்படக்கூடிய வியாசம் எழுதிய குற்றத்திற்காக 6 மாதம் காவல் தண்டனையடைந்த ஸ்வாமி சீதா நந்தர் இம்மாதம் 12தேதி விடுதலை பெறுவார் என்று டில்லிச் செய்தி கூறுகின்றது.

***

ராஜப்பிரதிநிதி, காந்தியடிகளுக்கும் பண்டிதர் மோத்திலால் நேருவுக்கும் தம்மை வந்து இம்மாதம் 23ந் தேதி சந்திக்கும்படி அழைப்பு அனுப்பியிருக்கின்றார் என்றும், இவ்விருதலைவர்களுடன் பேசிய பிறகு ராஜப்பிரதிநிதி மற்றத்தலைவர்களுடன் பேசுவார் என்றும் இங்கிலீஷ்மென் பத்திரிகையின் அரசியல் நிருபர் அறிவிக்கின்றார்.

***

கடப்பை ஜில்லா மஹாநாடு:—சென்றவாரம் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கடப்பை ஜில்லா அரசியல் மஹாநாடு ஸ்ரீ டி. பிரகாசம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்மாஹாநாட்டில் தலைமை வகிக்க ஒப்புக்கொண்ட ஸ்ரீமான் எஸ் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் தேக அசௌகரியங் காரணமாகத் தாம் தலைமை வகிக்கமுடியாதென்று அறிவித்ததினால் ஸ்ரீபிரகாசத்திற்கு அப்பதவி யளிக்கப்பட்டது.

லஜபதிராய் உருவப்படம்:—சென்னை கிரிஸ்தியன் கல்லூரி மாணவர் விடுதியான கெயித்னஸ் ஹாலில் ஸ்ரீமான் ஏ. ராமஸாமி முதலியார் லஜபதிராயின் உருவப்படத்தைத் திறந்துவைத்தார். அப்பொழுது ஸ்ரீமான் முதலியார், தாம், கிரிஸ்தியன் கல்லூரி மாணவராய் இவ்விடுதியில் வசித்தபொழுதுதான்லஜபதிராய் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டாரென்றும், தமக்குத் தேசபக்தி ஏற்பட லஜபதியின் தொண்டும் அதனால் அவர் அனுபவித்தகஷ்டமும் காரணமாகும் என்றும், மாணவர் லஜபதியின் வாழ்க்கையை நன்கறிந்து, அன்னவர் அடிச்சுவடுபற்றி நாட்டு நலத்திற்கான வழியில் பாடுபடவேண்டுமென்றும், படிப்பின் பயன் சுயநல வாழ்வன்றென்றும், கூறினார்.

***

இரங்கூனில் தமிழர் சங்கம்:— இரங்கூன் நகரிலுள்ள எல்லாவகுப்புத்தமிழர்களின் கூட்டமொன்று ரெட்டியார் பள்ளிக்கூடமண்டபத்தில் ராஜா டாக்டர் ராமநாத ரெட்டியார் தலைமையில் கூடிற்று. இக்கூட்டத்தில் தமிழர் சங்கம் என்றவொரு சங்கம் நிறுவப் பெற்றது. இச்சங்கத்தின் ஆதரவில் தமிழர் தொண்டர்படை என்ற வொரு படையை அமைக்க வேண்டுமென்று எல்லோராலும் தீர்மானிக்கப்பட்டது. இத்தமிழர் சங்கத்தில் சேரவிரும்புபவர் 4 அணா மாதசந்தாக் கொடுத்துச் சேரவேண்டும். ராஜா ஸர். அண்ணாமலை செட்டியாருக்கு ஒருபசாரம் அளிக்கவும், ராஜா அவர்கள் பெயரால் ஒரு இலவச வாசகசாலையைத் திறந்து வைக்கவும் தீர்மானிக்கப்பட இவ்விஷயங்களைக் கவனிக்க ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் **கலா நிலயம்** செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A .B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல் ஒருற்பிரவு வரை—K. இராமரத்நம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N. சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நீஷேன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாயினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தரனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

காலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால்	பையிண்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு ரூ 9—8—0
செலவு உள்பட:—	ஆப்லெதர் கில்டுபயிண்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு ரூ 11—8—0
	காலிகோ பயிண்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)